DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1432 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 15, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# Toronto Tamil International Film Festival 2023- Award Winning Films and Individuals

# ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா — 2023 அதில் வெற்றிபெற்ற திரைப்படங்களும் தனி ஆளுமைகளும்

## சிறந்த திரைப்படமாக "கடைசி விவசாயி" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது



கடந்த 9ம் 10ம் திகதிகளில் கனடாவின் மார்க்கம் நகரில் இடம்பெற்ற 2023 ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவிற்கான திரைப்படங்கள் திரையிடப்பட்ட முறையில் விழாவில் வெற்றிபெற்ற திரைப்படங்களும் தனி ஆளுமைகளும் பற்றிய விபரங்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் நிறுவனரும் அதிபருமான செந்தூரன் நடராஜா அவர்களின் தலைமையில் இயங்கிய தெரிவுக் குழுவினர் இந்த படங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவ்வாண்டிற்கான திரைப்பட விழாவின்சிறந்த திரைப்படமாக "கடைசி விவசாயி" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதன் இயக்குனர் மணிகண்டன் ஆவார். (உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)

BIG BILLYARD INSURANCE GROUP
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0 Google
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

## மானிப்பாய் இந்து மற்றும் மானிப்பாய் மகளிர் கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'பாலை நிலம்' திரைப்படம்

நோர்வே திரைப்பட விழாவில் 4 விருதுகளை வென்ற *பாலை நிலம்* திரைப்படம் ஞாயிற்றுக்கிழமை 17 ஆம் திகதி **Woodside** சினிமா வில் பி.ப. 1 .30 மணிக்கு மானிப்பாய் இந்து மற்றும் மகளிர் கல்லூரிகளின் பழைய மாணவர்சங்க ஆதரவில் காண்பிக்கப்படவுள்ளது.

தாயகத்தில் போராட்ட காலத்தில் நாம் வாழ்ந்த வாழ்க்கையை, எமது பழமையை பார்க்க வாருங்கள் திரையரங்கத்திற்கு சென்று 'பாலை நிலம் திரைப்படத்தைப் பார்க்கவும். கட்டணம் 10 டாலர்கள் மாத்திரமே. (உள்ளே விபரமான விளம்பரம் 15ம் பக்கத்தில்)

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE
Acupuncturist Mrs. K. Vsanthakumar
இடமாற்றம் பற்றிய அறிவித்தல்
இதுவரை காலமும் Kennedy & Finch சந்திப்புக்கு அருகில் இயங்கிவந்த மேற்படி அக்குபன்சர் சிகிச்சை நிலையம் தற்போது புதிய இடத்தில் பின்வரும் விலாசத்தில் இயங்கிவருகின்றது:
5200 Finch Ave. East. Suit 349,
Scarborough, ON M1S 4Z5 Tel: 416 754 4024

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX ACE
Bus: 416 270 1111 Cell: 416 801 3219
3-1286 Kennedy Road, Toronto, ON. M1P 2L5
வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ள (Appraisal Report)
24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K.Bales (Broker) MVA, (Market Value Appraiser) FRI, CRES. Email:skbales@hotmail.com


Latika Production
Latika
Gold House
பெருமையுடன் வழங்கும்
பிரமாண்டமான உள்ளரங்க இசை நிகழ்ச்சி
CANADA
பொங்கிவரும் இசை வெள்ளம்
தென் இந்திய கனடிய
கலைஞர்களின் சங்கமம்
Actor/ Singer
Chrish
Singer
Unni Menan
Anchor
B.H Abdhul Hameed
Singer
Sainthavi
Actress/ Singer
Rammiya Nambeesan
Music
Mathan Band
Singer
Aravinth
Singer
Srithar Sena
MC
KeeKee
Actor/ Singer / MC
Vijay
Music Director /Singer
A.R. Rehana
Singer
Chandraleka Anubama
Singer
Bob Shalini
Singer
Manashi
Singer
Anu Anand
Tickets
$40
$60
CANADA
Event Centre
Venue :
300 Water St, Whitby,
ON L1N 9B6, Canada
October
21
SATURDAY 4PM
Tickets
VIP $100
VVIP$200
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.
416 423 7555 - 416 625 5010

Canada
We acknowledge the financial support of the Government of Canada

# உதயன் கதிரோட்டம்

# இலங்கையைத் தொடர்ச்சியாகப் பல வழிகளிலும் பாதிக்கும் 'வைத்தியர்கள் வெளியேற்றம்'

உலகில் தெற்காசியப் பிராந்தியத்தில் சிறந்த சுகாதார சேவை வழங்கும் நாடுகளில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கும் இலங்கையைத் தொடர்ச்சியாகப் பல வழிகளிலும் பாதிக்கும் வைத்தியர்களின் வெளியேற்றம் என்னும் விடயம் தற்போது பூதாகரமான ஒரு அம்சமாகப் பார்க்கப்படுகின்றது. அங்கு இலவச வைத்திய சேவையை தமது வாழ்வின் ஒரு 'வெளிச்சமாகப்' பார்த்து பயன்பெற்று வந்த நடுத்தர மற்றும் ஏழை மக்கள் தங்கள் வாழ்வில் மேலும் 'இருள்' சூழ்ந்து விட்டதோ என்று ஏங்குகின்ற காலமொன்று தோன்றியுள்ளதா என்று அனைவரும் எண்ணிக்கொள்கின்றனர்

இலங்கை. இங்கு சுகாதார சேவையின் தரம் உயர் மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றது. அதன் பயனாக இந்நாட்டு மக்கள் ஆரோக்கிய ரீதியில் பல்வேறு விதமான பிரதிபலன்களை அடைந்து கொண்டுள்ளனர்.

எதிர்பார்க்கப்படும் வயதெல்லையில் அதிகரிப்பு, போலியோ, சின்னமுத்து, மலேரியா, யானைக்கால் நோய் போன்றன முற்றாக ஒழிப்பு, அதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரம், இன்னும் பல நோய்கள் கட்டுப்பாடு, நோய்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான தடுப்பு மருந்து வழங்கல் 95 வீதத்திற்கும் மேல் நடைமுறை உள்ளிட்ட பல முன்னேற்றங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இவை மாத்திரமல்லாமல் ஆரோக்கிய ரீதியில் இன்னும் பல முன்னேற்றங்களும் எட்டப்பட்டுள்ளன. இதற்கு இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் இலவச சுகாதாரக் கொள்கை பாரிய பங்களிப்பு நல்கியுள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே இலவச சுகாதார சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கென பாரிய சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் ஆளணி வசதிகளை இந்நாடு ஏற்படுத்தி இருக்கின்றது. இச்சேவைக்கென வரவு செலவு திட்டத்தின் ஊடாக கோடிக்கணக்கான ரூபா நிதி வருடா வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படுகின்றது.

இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக நாட்டு மக்கள் ஆரோக்கிய ரீதியில் பாரிய முன்னேற்றங்களை அடைந்து கொள்ள இந்நாட்டு மருத்துவர்களின் பங்களிப்பும் அளப்பரியதாகும். இது எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாத பங்களிப்பு. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. வைத்தியர்களை தெய்வங்களாகப் பார்த்து வணங்கும் உயர்ந்த பண்பு அந்த நாட்டு மக்களுக்கு உண்டு. உதாரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் வைத்தியர்களான தமிழர்களை 'கடவுள்' என்று பெரும்பான்மை சிங்கள மக்கள் வணங்கிய காட்சிகளை நாம் பார்த்து பெருமை கொண்டுள்ளோம். அந்தளவிற்கு எமது தமிழ் பேசும் வைத்தியர்கள் அங்கு சேவையாற்றிப் பாராட்டுக்களையும் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் நாட்டை விட்டு வெளியேறுவதில் மருத்துவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதாக அறியப்பட்டுத. அந்த வருடத்தில் மாத்திரம் 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமே குறப்பிட்டது செய்திகளாக வெளியாகின. ஆனால் மருத்துவர்கள் அவ்வாறான முடிவை எடுக்க முன்னர், தாம் மருத்துவராக இந்நாட்டு மக்களின் வரிப்பணம் எவ்வளவு தூரம் பயன்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என்ற குரல்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்டன

இலங்கை சுகாதார சேவையை மாத்திரமல்லாமல் கல்வியையும் முற்றிலும் இலவசமாக மக்களுக்கு பெற்றுக்கொடுத்து வருகின்றது. இலவச சுகாதார சேவைக்கு போன்று இலவச கல்விக்கும் இந்நாட்டு மக்களின் வரிப்பணம் தான் செலவிடப்படுகின்றது. அதனால் தாம் மருத்துவராகப் பங்களித்த இந்நாட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய தார்மீக பொறுப்பு ஒவ்வொரு மருத்துவருக்கும் உள்ளது. அவர்கள் நாட்டின் இலவச கல்வி கொள்கையில் கற்று மருத்துவர்கள் ஆனவர்களாவர். அதனால் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியைக் காரணமாகக் கொண்டு நாட்டை விட்டு வைத்தியப் பெருந்தகைகள் விலகிச் செல்வது மக்கள் விரும்பாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# கிளிநொச்சியில் காணாமல் போன பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்



கிளிநொச்சியில் சட்டவிரோத செயற்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில் கடமையின் நிமித்தம் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் காணாமல் போன நிலையில் தேடும் பணி இடம்பெற்று வந்தது.

நேற்று வியாழன் மாலை வரை காணாத நிலையில், இன்று வெள்ளிக்கிழமை 2ம் நாளாக பணி முன்னெடுக்கப்பட்ட நிலையில் புதுஐயங்குளத்திலிருந்து சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மாத்தறை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சதுரங்க எனும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார். கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தார்.

சடலம் நீதவான் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைகளை தொடர்ந்து உறவினர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிசார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அறிவிக்கப்படுகின்றது.

**Sapphire Banquet & Catering**

---------------------------

**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement
- Wedding Showers

**SHIVA SUBRAMANIAM (647) 406-4868**

## Notice

NOTICE IS HEREBY GIVEN that on behalf of Dexter Seusahai application will be made to the Legislative Assembly of the Province of Ontario for an Act to revive Tribal Carnival Inc. The application may be considered by the Standing Committee on Procedure and House Affairs. Any person who has an interest in the application and who wishes to make submissions, for or against the application, to the Standing Committee on Procedure and House Affairs should notify, in writing, the Clerk of the Legislative Assembly, Legislative Building, Queen's Park, Toronto, Ontario, M7A 1A2. Dated at 4pm, this 30th day of September 2023.

Dexter Seusahai

**SAREE BLOUSE தைத்தல் மற்றும் பயிற்சி வகுப்புக்கள்**

இலங்கையில் தையல் துறையில் பல வருடங்கள் அனுபவம் பெற்றவரான பெண்மணியினால் நியாயமான கூலியில் சாறி பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும். அத்துடன் சாறி பிளவுஸ் கட்டிங் வகுப்புகளும் எடுக்கப்படும்.
மிசிசாகா நகரில் **Mavis & Dundas** சந்திப்புக்கு அருகில் நிறுவனம் உள்ளது.
அத்துடன் **Scarborough** நகரிலும் விரைவில் வகுப்புக்கள் ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு:- தர்மா : 437 8333 2660 அல்லது 905 268 0272

**KITCHEN HELPER & LINE COOK WANTED**

Kitchen helper and dishwasher P/T line cook p/t woodbine and Denison Markham.
Call AMAR:
(416) 988-9518
7370 Woodbine Ave. Unit 9
Woodbine & Denison, Markham

**Food Services**

நீங்கள் வீட்டில் தயாரிக்கப்பெற்ற ஆரோக்கியமான இலங்கைத் தமிழர்களின் கறிவகைக-ளையும் உணவையும் சமைத்து விற்கிறீர்களா? அப்படியானால் நாங்க வந்து எடுக்கலாம். நீங்கள் அத்தகைய சேவைகளை வழங்கினால், 416-436-9542 என்ற எண்ணில் கண்ணன் என்பவரை தொடர்பு கொள்ளவும்.

**HELP WANTED**

**Help wanted for restaurant in Oshawa near Harmony and Taunton.**

- **Dishwasher**
- **Kitchen help**
- **Food delivery driver**

**Contact: 416-624-2224**

**Canadian Citizenship Exam எடுப்பதற்கு உதவி**

**Canadian Citizenship Exam** க்கு உதவிகள் தேவையா? பரீட்சைக்கு தயார்படுத்தி **Canadian Citizenship Exam** எடுப்பதற்கு உதவி செய்து தரப்படும்.

பின்வரும் இலக்கத்தை அழைக்கவும்

**Ramneet** 437-771-5294

**For All your Renovation Needs!**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva**

**416-706-8160**

# தமிழ் இன படுகொலை தொடர்பாக குரல்கொடுக்காதவர்கள் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை வைத்து அரசியல் நடத்துவது கேவலமான விடயமாகும் – செல்வம் அடைக்கலநாதன்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



தமிழ் இன படுகொலை தொடர்பாக குரல்கொடுக்காத எதிர்க்கட்சித்தலைவர், கர்தினால் மற்றும் ஏனையவர்கள் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடாத்துவது உண்மையிலே கேவலமான விடயமாகும் என்று வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தொடர்பாக சனல் 04 வெளியிட்ட தகவலானது பரபரப்பாக பேசப்பட்டு வருகின்ற நிலை காணப்படுகின்றது. தென்னிலங்கையில் உள்ளவர்களும், கர்தினால் இவ் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும் என்ற கோரிக்கையினை வைக்கின்றனர்.

நாங்களும் இது தொடர்பாக சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச நீதிமன்றத்திற்கு இதனை கொண்டு செல்ல வேண்டும் என்று சொல்வதுடன், விரைவாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

மேலும் ஜனாதிபதி தேர்தலை முன்னிறுத்தியே இவ்விடயமானது தற்போது பேசுபவருளாக இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சி காலத்திலே தமிழ் மக்களினை படுகொலை செய்ததுடன் மனித உரிமை மீறல்களையும் மேற்கொண்டிருந்தனர். இது தொடர்பாக ஐநா சபை கண்டனம் தெரிவித்ததுடன் இது தொடர்பான பூரண விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசிடம் கோரிக்கையினையும் முன்வைத்திருந்தனர்.

மேலும் இவ் விடயம் தொடர்பாக கடந்த காலங்களிலே சர்வதேச விசாரணையினை மேற்கொள்ள வேண்டும் அல்லது சர்வதேச நீதித்துறையை சார்ந்தவர்கள், சர்வதேச வழக்கறிஞர்களை அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என வலியுறுத்தியிருந்தோம். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் குரல்கொடுக்காத எதிர்க்கட்சித்தலைவர், கர்தினால் மற்றும் ஏனையவர்கள் உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடாத்துவது உண்மையிலே கேவலமான விடயமாகும்.

கர்தினால் உட்பட அனைவரும் மனச்சாட்சியுடன் இந்நாட்டில் புரையோடிப்போய்யுள்ள இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என எண்ணி இருந்திருந்தால், கடந்த காலங்களிலே மகிந்த ராஜபக்சவின் குடும்பம் மேற்கொண்ட அட்டூழியங்கள், மனித உரிமை மீறல்களிற்கு எதிராக குரல்கொடுத்திருந்திருக்கலாம் என தெரிவித்தார்.

# தையிட்டி விகாரைக்கு தனியார் காணிகளை சுவீகரிப்பதற்கு எதிராக போராட்டம்!






தையிட்டி சட்டவிரோத விகாரைக்காக தனியார் காணிகளை ஆக்கிரமித்து சுவீகரிக்கும் நோக்கில் காணி அளவீடு செய்யும் நடவடிக்கை செவ்வாய்க்கிழமை 12-09-2023 மேற்கொள்ளப்படவுள்ளது.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து பௌத்த சிங்களமயமாக்கி, தமிழர்களின் சொந்த நிலத்தில் தமிழர்களை அகதிகளாக்கும் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் இந்த செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்காக தையிட்டி சட்டவிரோத விகாரையின் முன் தமிழர்களாய் திரள்வோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

# பொன். சிவபாலன் அவர்களின் 25 ஆவது நினைவு தினம் சித்தன்கேணியில் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாண மாநகர முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளரும், சிறந்த அடுக்குமொழிப் பேச்சாளரும், கவிஞரும், பொது நலன் அக்கறையாருமான அமரர் பொன். சிவபாலனின் 25ஆவது வருட நினைவு 11.09.2023 திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் அன்னாரது சித்தங்கேணி இல்லத்தில் நடைபெற்றது.

குடும்ப உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தலின்போது திருவுருப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ்ப்பாண மாநகரசபையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் யாழ்ப்பாண நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ் பொலிஸ் அத்தியடசகர் சந்திரா பேர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பேர்னாண்டோ, யாழ்ப்பாண தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ்ப்பாண நகர பிரிகேட் மேஜர் கப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ்ப்பாண மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப்பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி. மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரண்டுபேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.



# பேர்த்தியின் எதிர்காலம் குறித்த கவலையில் பேர்த்திக்கு விஷ ஊசி செலுத்தி நானே கொலை செய்தேன்

## பாட்டியார் பொலிஸாருக்கு வாக்குமூலம்

பேர்த்தியின் எதிர்காலம் குறித்த கவலையில் பேர்த்திக்கு விஷ ஊசி செலுத்தி நானே கொலை செய்தேன். கொலை செய்த பின்னர் நானும் உயிர்மாய்த்துக்கொள்ள ஊசியை செலுத்திக்கொண்டேன் என பாட்டியார் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் விடுதி அறையில் இருந்து 12 வயது சிறுமி சடலமாகவும், பெண்ணொருவர் சுயநினைவற்ற நிலையிலும் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டனர்.

சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்ட பெண், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் பின் உடல்நலம் தேறிய நிலையில் அவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் விசாரணைகளின் போது, தனது பெயர் நாகபூசணி (வயது 55) எனவும் தான் ஒரு மருத்துவ தாதியாக கடமையாற்றியவர் எனவும் கூறியுள்ளார். அத்துடன் தனது பேத்தியின் பெயர் பார்த்திமா ஹீமா (வயது 12) என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து விசாரணைகளில், "நான் மருத்துவ தாதியாக பணியாற்றியுள்ளேன்.. எனது மகள் முஸ்லீம் இளைஞன் ஒருவரை காதலித்து திருமணம் செய்து அவர்களுக்கு பெண் பிள்ளை பிறந்த நிலையில், அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். அதன் போது அவர்களது பிள்ளை என்னுடன் வளர்ந்து வந்தது.

சில காலத்தில் இருவரும் வெவ்வேறு திருமணம் செய்து, வாழ சென்று விட்டனர். பேத்தி என்னுடன் வளர்ந்து வந்தார். இந்நிலையில், பேத்தியின் தகப்பன், தன்னுடன், தனது பிள்ளையை அனுப்புங்கள், நான் வளர்க்கிறேன் என கூறி எனது பேத்தியை அழைத்து சென்று விட்டார்.

பேத்தி என்னை விட்டு பிரிந்ததும், அவளின் பிரிவு துயரும், அவளின் எதிர்காலம் எப்படி இருக்க போகுதோ என்ற கவலையும் எனக்கு ஏற்பட்டது. அதனால் நான் சில மாதங்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகி இருந்தேன்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திருகோணமலைக்கு சென்று, எனது பேத்தியின் தந்தையிடம், பேத்தி சில நாட்கள் என்னுடன் இருக்கட்டும், வீட்டுக்கு கூட்டி போய் சில நாட்களில் மீண்டும் அழைத்து வந்து விடுகிறேன் என கூறி பேத்தியை அழைத்துக்கொண்டு, யாழ்ப்பாணம் வந்தேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவ மனையில் பேத்திக்கு மருத்துவம் செய்ய வந்துள்ளோம் என கூறி அந்த மருத்துவ மனைக்கு அருகில் உள்ள தங்குமிடத்தில் அறையை வாடகைக்கு பெற்று, தங்கி இருந்தோம்.

அப்போது, பேத்தியின் எதிர்காலம் எப்படி இருக்க போகுதோ என்ற கவலையில் பேத்தியை கொலை செய்து விட்டு, நானும் உயிரை மாய்த்துக்கொள்வோம் என முடிவெடுத்தேன்.

அறையில் பேத்தியை விட்டு விட்டு, அருகில் உள்ள மருந்தகத்திற்கு சென்று தூக்க மாத்திரை உள்ளிட்ட மாத்திரைகளையும் ஊசியையும், (சிறிஞ்) வாங்கினேன். என்னிடம் மருத்துவ தாதி என்பதற்கான அடையாள அட்டை இருந்தமையால், அதனை காட்டி மருந்துகளை வாங்கினேன்.

அறைக்கு வந்து பேத்திக்கு தூக்க மாத்திரைகளை போட கொடுத்து, அவள் தூங்கிய பின்னர் மருந்துகளை கலந்து ஊசி மூலம் அவளின் உடலில் செலுத்தினேன்.

பின்னர் நானும் அதனை எனக்கும் செலுத்திக்கொண்டேன். ஊசி ஏற்றியதில் அவள் இறந்து விட்டாள், நான் காப்பாற்றப்பட்டு விட்டேன்" என தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர் உயிரிழந்த சிறுமியின் பாட்டியை வியாழக்கிழமை பொலிஸார் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, மன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, "எங்கள் இறப்பிற்கு யாரும் காரணம் இல்லை. எங்களை வீட்டுக்கு எடுத்து செல்ல வேண்டாம்" என சிறுமியின் பாட்டி பொலிஸாருக்கு எழுதிய கடிதமும் பொலிஸாரினால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் — உடுப்பிட்டி சந்தியில் மதுபான சாலையை அகற்றுமாறு கோரி உடுப்பிட்டியில் போராட்டம்!

புு. கஜிந்தன்



யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபான சாலையை அகற்றுமாறு கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



உடுப்பிட்டி சந்தியில் 14-09-2023 அன்று காலை இந்த போராட்டம் அப்பகுதி மக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

மதுபான சாலை அமைந்துள்ள குறித்த பகுதியில் பாடசாலைகள், ஆலயம் என்பன இருப்பதனால் இந்த மதுபானசாலை அகற்றப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு சில தினங்களுக்குள் மதுபான சாலை அகற்றப்படாவிட்டால் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்தனர்.

போராட்டம் தொடர்பான மகஜர் வடக்கு மாகாண ஆளுநர், அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவரிடம் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாண கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் சமாசங்கள் ஆகியன ஒன்றிணைந்து பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளனர். இந்த மகஜர் யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தில், துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாரதப் பிரதமர்,
மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கட்கு.

இலங்கை, இந்திய மீனவர் தொடர்பானது.

இலங்கையின் வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களிற்கும் இந்திய மீனவர்களிற்கும் இடையிலே இழுவைப் படகினால் கடல் வளமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதான பிரச்சணை நீண்டகாலமாக தொடர்ந்த வண்ணமே உள்ளது. தாங்கள் பதவியேற்ற பின்பு 2016 ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி டில்லியில் இரு நாட்டின் வெளவவகார அமைச்சு மட்டத்தில் இராஜதந்திரப் பேச்சுக்கள் இடம்பெற்று ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதை இரு நாட்டு மீனவ சமூகமும் ஏற்றுக்கொண்டு அதன் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது இரு நாட்டு அரசுகளும் இந்தப் பேச்சின்போது எட்டப்பட்ட தார்மானங்களை முன்கொண்டு செல்ல வடக்கு மீனவ சமூகம் தங்களை வேண்டி நிற்கின்றது.

தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இலங்கை, இந்திய மீனவர் பிரச்சணை அரசியலாக்கப்பட்டு அரசிஇயல் கட்சியின் உறிப்பினர்கள் மீனவர்கள் என்ற பெயரிலும் கூட்டுறவு ஜனநாயக கட்டமைப்புக்களை செயலிலக்க வைத்து அதன் ஊடாக அரசியல் கட்சி ஒன்றின் பிரதிநிதிகளும் அதன் ஆதாரவாளர்களும் இணைந்து உண்மையான மீனவ பிரதிநிதிகளை ஓரம்கட்டும் செயலபாடு அரசியல் கட்சியினால் முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாக இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் தான் சார்ந்த ஈ.பி.டி.பி கட்சியினரை மட்டுமே உள்வாங்கிச் செயல்பட்டு சங்கங்களை உருவாக்கி வருகின்றார்.



தற்போது இரு நாட்டு மீனவர் பிரச்சணையும் பேச்சுவார்த்தைகள் என்ற ரீதியிலே பேசுபொருளாக உள்ளது. ஆகையால் 2016ஆம் ஆண்டு எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் 2016ஆம் ஆண்டு பேச்சுவார்த்தையில் பங்குகொண்ட பிரதிநிதிகளை இணைத்து தீர்வு எட்டப்பட வேண்டும் என எதிர்பார்ப்பதோடு தற்போது உள்ள கட்சி ஆதாரவாளர்களைக் கொண்டுள்ள அமைப்புக்களுடன் கலந்துரையாடுவதனையோ அவர்கள் மீனவ பிரதிநிதிகள் எனக் கூறுவதனையோ இதன் கீழ் கையொப்பமிடும் சங்கங்கள் சமாசங்கள் விருப்பவில்லை எனபதனையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

தற்போது இருநாட்டு தொப்புள்கொடி உறவுக்கு தடையாக இருக்கும் இழுவைமடித் தொழிலை இலங்கை கடற்பரப்பிற்குள் நிறுத்தி இருநாட்டு தமிழ் மீனவர்களும் ஒற்றுமையுடனும், சகோதரத்துடனும் வாழ்வாதரத்தை நடாத்த ஆவண செய்வீர்கள் என நம்புகின்றோம் - என்றுள்ளது.



கனடிய செய்திகள்
Canadian News

## 2023 Toronto Tamil International Film Festival. Award winning Films and Individuals

# 2023 ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவில் வெற்றிபெற்ற திரைப்படங்களும் தனி ஆளுமைகளும்

**-சிறந்த திரைப்படமாக "கடைசி விவசாயி" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது-**



கடந்த 9ம் 10ம் திகதிகளில் கனடாவின் மார்க்கம் நகரில் இடம்பெற்ற 2023 ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவிற்கான திரைப்படங்கள் திரையிடப்பட்ட முறையில் விழாவில் வெற்றிபெற்ற திரைப்படங்களும் தனி ஆளுமைகளும் பற்றிய விபரங்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

இந்த வருடத்தின் ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்படவிழாவிற்கு தமிழ்த் திரைப்படங்கள் மாத்திரமல்ல வேற்று மொழிப் படங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

திரைப்படங்கள் காட்டப்பெற்ற இரண்டு நாட்களும் வேற்று மொழி பேசும் திரைப்பட ரசிகர்களும் அங்கு கலந்து கொண்டு தமிழ்த் திரைப்படங்களை கண்டு களித்தனர்.

ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் நிறுவனரும் அதிபருமான செந்தூரன் நடராஜா அவர்களின் தலைமையில் இயங்கிய தெரிவுக் குழுவினர் இந்த படங்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவ்வாண்டிற்கான திரைப்பட விழாவின்சிறந்த திரைப்படமாக "கடைசி விவசாயி" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதன் இயக்குனர் மணிகண்டன் ஆவார்.

மேற்படி திரைப்பட விழாவின் முடிவுகள் தொடர்பாக வெளியிட்பபெற்றுள்ள அறிவித்தலில்ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் நிறுவனரும் அதிபருமான செந்தூரன் நடராஜா அவர்களின் தலைமையில் இயங்கிய தெரிவுக் குழுவினர் பின்வருமாறு அறிவித்துள்ளனர்.

The Toronto Tamil International Film Festival family and jury extend a warm congratulations to these award winners who have positively shaped the world of film and storytelling.

Awards For Album Song
-----------------------------
Award for Best Album Song: Nenjil Pirandhaval (Karthik Mohan)
Award for Best Album Song (Honorable Mention): Amma (Uday Prakash, Mathavan Maheswaran)

https://www.ttff.ca/award-winners-2023/

வெற்றியீட்டிய தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் மற்றும் நடிக நடிகைகள் ஆகியோருக்கும் இரண்டுநாட்களும் திரையிடப்பெற்ற திரைப்படங்களை பார்வையிட்டவர்களுக்கும் கனடா உதயன் நிறுவனம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.









Jury Award
Jury Award Best Feature Film:
-------------------------
The Last Farmer – filrp tptrhap (Director: Manikandan M)
Jury Award Best Short Film: Power of Compassion (Director: David Li)
Jury Award Best Feature Film Director: AMUDHAVANAN P (Vindhya Victim Verdict V3)
Jury Award Best Feature Documentary Film: Trace (Director: Sonia Oduwa Aimiumu)
Jury Award for Best Actress: Sai Pallavi (Movie: Gargi)
Audience Award
Audience Award Best Feature Film: Yaathisai (Director: Dharani Rasendran)
Audience Award Best Short Films: Two worlds (Director: Nithya Gopalakrishnan)

Special Jury Award:
---------------------
Best Feature Film: Yenni Thuniga (Director: SK Vetri Selvan)
Award for Best Thriller Feature Film: AGRINAI – RGB (Director: THANESH PERRABU)
Best Film on Social Issues Feature Film: KUDIMAHAAN (Director: Prakash Nagarajan)
Best Short Documentary Film: Boundary Village (Director: Sivanantham Virushan)
Best Costume Design: Silver Screen Dreams (Director: David Li)
Best Covid19 Film: Apoorva (Director: Bravinth Raveendran)

Honorable Mention
-------------------------
Best Short Film : Backspace (Director: Vivekanandan Ravichandran)
Best Short Film : Thedal (Director: Venkat Arunachalam)
Best Film on Social messages Short Film: A Second Chance (Director: Branavi Raveendran)

Special Jury Award: Outstanding Performance
----------------------------------------------
Award for Best Debut Director: Dhilipkumar Rajendran (Movie: Dhill Dhilip)
Award for Best Actor: Srithar (Movie: Innocent)
Award for Best Child Artist: Gamsa Kumar (Movie: Apoorva)
Award for Best Supporting Actor: Kethiri Sudhakar Reddy (Movie: The Group (Balagam))


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY
-----------------------------------

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


# யாழ்ப்பாணத்தில் பெரும் பிரச்சனையாக மாறியுள்ள போதைப் பொருட்கள் விற்பனை

- நடராசா லோகதயாளன்

**யா**ழ்ப்பாணத்தில் 2 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனையாகும் ஹெரோயின் துன்னாலையில் ஆயிரத்து 200 ரூபா விலையில் கிடைப்பதனால் அதனைப்பெற யாழ்ப்பாணத்தில் இருந்து பலர் சென்று வரும்போது ஏற்பட்ட விபத்தில் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளதாக அரச மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குற்றவியல் தொடர்பான கலந்துரையாடல் இந்த வாரம் மாவட்டச் செயலகத்தில் அமைச்சரும் இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றபோதே போதனா வைத்தியசாலை சார்பில் பங்குகொண்ட வைத்தியர் இதனைத் தெரிவித்தார்.

"யாழப்பாண நகர்ப் பகுதியில் 2,000 ரூபா குடத்தனையில் 1,200 ரூபாவிற்கு விற்பனையாவதனால் அதனைப்பெற இங்கிருந்து பலர் சென்று வருகின்றனர். இவ்வாறு சென்று வந்த சமயம் ஏற்பட்ட விபத்தில் நால்வர் உயிரிழந்தமை மரணத்தின் பினபான விசாரணையில் கண்டுகொள்ளப்பட்டது".

இதேநேரம் அங்கே யார் இதனை விற்பனை செய்வது எனவும் தெரியும். இது விற்பனையாகும் இடத்தை சொன்னால் அந்த இடத்திற்குள் போஏலாது என பொலிசார் கூறுகின்றனர் என்றும் அந்த அரச வைத்தியர் மேலும் விசனம் வெளியிட்டார்.

இதனபோது பதிலளித்த வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், "இலங்கை முழுவதும் இன்று போதைப் பொருள் பாவனை ஏற்பட்டுள்ளது. பொலிசாரும் அதனை தடுக்க முயல்கின்றனர். இதேவேளை உண்மையில் இலங்கையிலேயே போதைப் பொருள் பாவனை குறைந்த மாவட்டம் யாழ்ப்பாணம் மாவட்டம். யாழ்ப்பாணத்தில் அதிகமாக போதைப் பொருள் பிடிபட்டாலும் யாழ்ப்பாணம் ஊடாக தெற்கிற்கு எடுத்துச் செல்ல முறபடும்போதே பிடிபடுகின்றன" எனத் தெரிவித்தார்.

அண்மை காலத்தில் இந்திய இலங்கை கடற்பரப்பு சர்வதேச மட்டத்தில் முக்கியமான போதைப் பொருட்கள் கடத்தப்படும் பாதையாக மாறியுள்ளது என்று போதைப் பொருட்கள் கடத்தப்படுவதை தடுக்கும் பன்னாட்டு அமைப்பு கூறியுள்ளது.

வளர்ந்து வரும் மற்றும் வறிய நாடுகளை இலக்கு வைத்தே சர்வதேச போதைப் பொருட்கள் விற்பனை கும்பல்கள் ஈடுபடுகின்றன, அதற்கு முன்னர் ஆக்பானிஸ்தான் - பாகிஸ்தான் வலையப் பகுதிகள் பன்னாட்டு போதைப் பொருட்கள் வர்த்தகத்தைன் மையமாக திகழ்ந்தன. எனினும், அந்த பகுதியில் அதியுயர் தொழில்நுட்ப கண்காணிப்பு மூலம், இந்திய - இலங்கை கடற்பரப்பு அதிலும் குறிப்பாக தெற்கு இந்தியாவின் கேரள மாநிலத்தின் கடற்பரப்பை அண்டிய பகுதி வழியாக இந்த கடத்தல்கள் நடைபெறுகின்றன என்று இண்டர்.:.போல் எனப்படும் சர்வதேச பொ-லிஸ் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் சூழல், இந்த கடத்தலுக்கு ஏதுவாக உள்ளதால், சர்வதேச வலையமைப்பினர் பாக் நீரணை ஊடாக இந்த கடத்தலை முன்னெடுத்து வருகின்றனர் என்றும், இலங்கையில் நிலவும் பொருளாதர நெருக்கடியை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள கடத்தல் கும்பல்கள் தீவிரமாக செயல்படுகின்றன என்றும் கடற்சார் பாதுகாப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலும், இலங்கையின் வடபுலத்திலும் போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்து வருவது தொடர்பில், கல்விமான்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கவலை வெளியிட்டு வருகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

# இந்திய மீனவர்களுடன் பேசுவது தொடர்பில், யாழ்ப்பாண மீனவர்களிடையே கருத்து மோதல்

- நடராசா லோகதயாளன்

**க**டற்றொழில் அமைச்சரினால் மீனவர்கள் என பேச்சிற்கு தமிழ்நாட்டிற்கு அனுப்ப ஏற்பாடு செய்பவர்கள் கட்சி எடுபிடிகளே அன்றி உண்மை மீனவர்கள் கிடையாது எனவே பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தால் எம்மையும் அழைக்க வேண்டும் என உள்ளூார் மீனவ அமைப்புக்கள் சில இந்தியத் தூதரகத்திடம் முறையிடுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

உள்ளூார் மீனவர்கள் கடல் வழியாக தமிழ்நாட்டிற்குச் சென்று பேசப்போவதாக ஊடகங்கள் வாயிலாக அறிக்கையிட்டிருந்தனர். இருந்தபோதும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் ஊடகங்களிற்கு கருத்துரைத்த கடற்றொழில் அமைச்சர் மீனவர்கள் கடல்வழியாக தமிழ்நாட்டிற்கு செல்லவுள்ளதாகவும் இலங்கை கடற்படையோ அல்லது இந்திய கடற்படையோ தடுக்க கூடும் அவ்வாறு தடைப்பட்டால் விமானத்தில் பயணிப்பர் எனத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விமானத்தில் பயணிப்பதற்கான செலவு தொகைக்காக மக்களிடம் இருந்து நிதியை பெறுவதற்காக உண்டியல் மூலம் நிதி வசூலிக்க திட்டமிடுவதாக ஒரு திட்டத்தையே அறிவித்துள்ளார். இதனால் அவர்களது அடுத்த திட்டம் என்ன என்பதனை அறிய முடிகின்றது.

இவற்றின் அடிப்படையில் கட்சி ஆதரவாளர்களை வடக்கு மாகாண மீனவர்கள் என அனுப்பி எம்மையும் சேர்த்து அவ மதிக்காது தமிழ் நாட்டில் பேச்சுக்கள் இடம்பெற்றால் அதில் எம்மையும் இணையுங்கள் எனக் கோரிக்கை விடுத்தே இந்திய தூதரகத்திடம் கோரிக்கை மனு கையளிக்கப்படவுள்ளது என மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 M | 45 F | 50 M | 50 F | 55 M | 55 F | 60 M | 60 F | 65 M | 65 F |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 M | 45 F | 50 M | 50 F | 55 M | 55 F | 60 M | 60 F | 65 M | 65 F |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4



# கிடைக்கும் ராஜதந்திர வாய்ப்புகளைப் பயன்படுத்துவது

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

சனல் நாலு வெளியிட்ட வீடியோவை முதலில் அதிகமாக பரவலாக்கியதும் பரப்பியதும் சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைத்தளக் கணக்குகள் தான். அந்த ஆவணப் படத்தில் பிள்ளையானுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருப்பதனால், சாணக்கியனுக்கு ஆதரவான தரப்புகள் அதை வேகமாகவும் அதிகரித்த அளவிலும் பரப்பினார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சாணக்கியன் ஆகிய இரண்டு தரப்புகளிடமும் பலமான சமூக வலைத்தள பிரச்சாரகக் கட்டமைப்பு ஒன்று உண்டு. சாணக்கியனுக்கு ஆதரவான கட்டமைப்புக்கூடாகத்தான் இப்பொழுது பிள்ளையானுக்கு எதிரான அசாத் மௌலானாவின் சாட்சியம் பரவலாக பகிரப்பட்டு வருகின்றது.

சனல் நாலு வெளியிட்டிருக்கும் வீடியோவானது ரணிலைப் பலப்படுத்தும் மேற்கத்தய நிகழ்ச்சி நிரலின் பிரதிபலிப்பு எனலாம். அதே சமயம் அதில் தமிழ் மக்களுக்குச் சாதகமான அம்சங்கள் உண்டு. இலங்கை அரசுக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் குற்றச்சாட்டுக்கள் அந்த வீடியோவில் உண்டு. தமிழ் மக்கள் ஏன் பரிகார நீதியை கேட்கின்றார்கள் என்பதற்கு தேவையான தர்க்கபூர்வமான சான்றுகளை அந்த வீடியோ வெளிப்படுத்துகின்றது. அந்த வீடியோவில் கூறப்படும் தகவல்கள் உண்மையான இல்லையா என்பதனை விசாரிப்பதற்கு அனைத்துலக விசாரணை வேண்டும் என்று இலங்கைத் தீவில் உள்ள மூன்று இனத்தவர்களும் கோரிக்கை முன்வைப்பது ஒரு விசேஷமான விடயம். இவ்வாறு இலங்கை தீவில் உள்ள மூன்று இனங்களும் இந்த ஒரு விடயத்தில் ஒரே விதமான கோரிக்கைகளை முன்வைக்கின்றன. இது சனல் நாலு வீடியோவுக்குள்ள ஒரு தனி விசேடமான அம்சம்.

எனவே சனல் நாலு வெளியிட்ட வீடியோவானது இலங்கைத் தீவில் மேற்கு நாடுகளின் நலன்களை பாதுகாக்கும் நோக்கிலானது என்பது அதன் ஒரு பரிமாணம். இன்னொரு பரிமாணம் அது தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்திற்கு பலம் சேர்க்கின்றது.

சனல் நாலு வீடியோ மட்டுமல்ல, இந்தப் பூமியிலே இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அல்லது இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்புக்கு எதிராக வெவ்வேறு நாடுகள், அனைத்துலக நிறுவனங்கள் முன்னெடுக்கும் வெவ்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகள் அனைத்துமே ஏதோ ஒரு விதத்தில் ஈழத்தமிழர் கெட்டித்தனமாகக் கையாள வேண்டிய வாய்ப்புகள்தான். அவ்வாறான வாய்ப்புகளை வழங்கும் மேற்கத்திய மற்றும் பிராந்திய அளவிலான நகர்வுகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

முதலாவதாக, அமெரிக்க கண்டத்தில் அங்குள்ள இரண்டு பெரிய நாடுகளாகிய அமெரிக்காவும் கனடாவும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் அதன் படைப்பிரதானிகள் சிலருக்கு எதிராகவும் நிர்ணயகரமான நகர்வுகளை முன்னெடுத்திருக்கின்றன. இலங்கைத் தீவின் இப்போதுள்ள படைத் தளபதியை அமெரிக்கா நாட்டுக்குள் வருவதற்கு தடை விதித்திருக்கிறது. அதுபோலவே முன்னாள் கடற்படை தளபதி ஒருவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு வழக்குத் தொடுக்க முடியும். அவ்வாறு மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக அமெரிக்காவில் வழக்கு தொடுக்கத் தேவையான வாய்ப்புகளை அந்தச் சட்டம் அதிகப்படுத்தியிருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவதாக, கனடாவில் இனப்படுகொலை தொடர்பில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தவிர, மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக இந்த ஆண்டு மார்ச் மாதம் கனடா தடைகளை விதித்திருக்கின்றது. அதன்படி அவர்கள் அந்த நாட்டில் தமது பினாமிகளின் ஊடாகக்கூட முதலீடுகளைச் செய்ய முடியாது.

இவை தவிர கனேடியப் பிரதமர் கடந்த மே 18 ஆம் திகதியன்று தன்னுடைய உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தையை பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு சாதகமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அப்பதிவை எத்தனை லட்சம் தமிழ் மக்கள் திரும்பத் திரும்ப "ரீ ருவீற்" பண்ணினார்கள்? அங்கேதான் தெரிகிறது தமிழ் மக்களின் இலத்திரனியற் கட்டமைப்புகளின் பலவீனம். கனேடியப் பிரதமரின் கருத்துக்கு இலங்கை உத்தியோகபூர்வமாக எதிர்ப்பு தெரிவித்திருந்தது. அதாவது அதை இலங்கை அரசுக் கட்டமைப்பு எதிர்கின்றது. அப்படி என்றால் அதைத் தமிழ் மக்கள் எப்படி கையாள வேண்டும்? கனேடியப் பிரதமரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்துக்கு சென்று அவர் அங்கே பதிவிட்டிருப்பதை திரும்பத் திரும்ப லட்சக்கணத்தில் கோடிக்கணக்கில் "ரீ ருவீற்" பண்ண வேண்டும். அது அவருக்கு உற்சாகமூட்டும். தமிழ்மக்கள் கனடாவோடு தமது சகோதரத்துவத்தை, வாஞ்சையை தெரிவிப்பதற்கு அது ஒரு அருமையான சந்தர்ப்பமாக இருந்தது. ஆனால் எத்தனை தமிழ் கட்சிகள் அல்லது தமிழ் அமைப்புகள் அல்லது செயற்பாட்டாளர்கள் அதை அவ்வாறு நோக்கின? கையாண்டன?

கனடாவின் மேற்கண்ட நடவடிக்கைகள் அங்குள்ள பலமான தமிழ் புலம்பெயர் சமூகத்தின் வாக்குகளைக் கவரும் நோக்கிலானவை என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் அவை அவற்றின் விளைவுகளைக் கருதிக்கூறின் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்திற்குப் பலம் சேர்ப்பவை.

மூன்றாவது நகர்வு, கடந்த ஆண்டு ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 46\1 தீர்மானத்தின் பிரகாரம் இலங்கைத்தீவில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு அலுவலகம் ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கி வருகிறது. அங்கே சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒரு நாள் இலங்கைக்கு எதிராக கையாளப்படத் தக்கவை.

இந்த வாரம் தொடங்கிய ஐநா கூட்டத் தொடரில் எனது உரிமைகள் ஆணையாளர் அந்த அலுவலகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அதில் தமிழ் தரப்பு மனித உரிமை மீறல்களும் தொடர்பான தரவுகளும் இருக்கும். ஏனெனில் ஐநா அதை தமிழ் நோக்கு நிலையில் இருந்து தொகுக்கவில்லை. சீன விரிவாக்கத்தின் கருவிகளாக காணப்படும் ராஜபக்ச சகோதரர்களை எப்பொழுதும் சுற்றி வளைத்து வைத்திருக்கும் ராஜதந்திர உள்நோக்கங்கள் ஐநா தீர்மானங்களில் உண்டு. ஆனாலும் தமிழ் நோக்கு நிலையில் இருந்து இலங்கைத் தீவின் அரச கட்டமைப்பும் அரசியல் பாரம்பரியமும் பொறுப்புக் கூறலுக்கு உகந்தவை அல்ல என்பதனை நிரூபிப்பதற்கு அவை உதவும்.

நான்காவது நகர்வு, இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்மையில் ராமேஸ்வரத்தில் வைத்துக் கூறிய கருத்துக்கள். இலங்கை தீவில் இடம் பெற்றது பெரிய மனித படுகொலை அல்லது இனப்படுகொலை என்ற பொருள்பட அவர் கருத்து தெரிவித்திருக்கிறார். தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகளின் வாக்கு வங்கிக்குள் இருந்து ஈழ ஆதரவாளர்களை பிரித்து எடுப்பதற்கான ஒரு உத்தியாகத்தான் அமித் ஷா அப்படிச் சொன்னார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவர் ஒரு உள்துறை அமைச்சர். அவர் அவ்வாறு கூறியிருப்பதை ஈழத் தமிழர்கள் பொருத்தமான விதங்களில் கையாளலாம். ஏற்கனவே 40 ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி இந்திய நாடாளுமன்றத்தில் வைத்து இலங்கையில் நடப்பது இனப்படுகொலை தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறினார். அடுத்த ஆண்டு அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த சவான் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக நடப்பவற்றில் இனப்படுகொலையின் கூறுகள் உண்டு என்று கூறினார். இப்பொழுது அமித் ஷா கூறியிருக்கிறார்.

அமித்ஷா கூறியிருப்பது பெருமளவுக்கு உள்நாட்டுத் தேர்தல் தேவைகளுக்கானதாக இருக்கலாம். ஆனால் அதை ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இருந்து வெற்றிகரமாகக் கையாள வேண்டும் அதற்குரிய உபாயங்களை ஈழத்தமிழர்கள் வகுத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது தொகுத்து பார்க்கலாம் கனடாவோ அமெரிக்காவோ அல்லது இந்திய உள்துறை அமைச்சரோ அல்லது ஐ.நாவோ அல்லது ஏனைய உலகப் பொது நிறுவனங்களோ சனல் நாலோ, தமிழ் தேசிய நோக்கு நிலையில் இருந்து முடிவுகளை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது அம்புலிமாமாக் கதை போன்றது. அரசியல் என்பது நலன் சார் உறவுகளின் இடையூடாட்டம் தான். அங்கே அறநெறி, நீதி நியாயம் போன்றவை இரண்டாம் பட்சம். உலக நாடுகளும் உலக பொது நிறுவனங்களும் உலகளாவிய ஊடக நிறுவனங்களும் தங்கள் தங்கள் நலன்சார் நோக்கு நிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். தமது அரசியல் பொருளாதார இலக்குகளை முன்வைத்தே எந்தவோர் அரசும் வெளிவிவகார முடிவுகளை எடுக்கும். எனவே வெளியரசுகளும் ஐநா போன்ற உலகப் பொது நிறுவனங்களும், சனல் நாலு போன்ற ஊடகங்களும் ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இருந்து முடிவுகளை எடுக்க மாட்டா.

ஆனால் இலங்கை சம்பந்தப்பட்ட அவர்களுடைய நகர்வுகள் ஈழத் தமிழர்கள் தமக்குச் சாதகமாகக் கையாளத்தக்கவைகளாக இருக்கும். அவற்றைப் பொருத்தமான விதத்தில் பொருத்தமான வேளைகளில், வெற்றிகரமாகக் கையாண்டு நீதிக்கான தமது போராட்டத்துக்கு எப்படி அணி சேர்க்கலாம் என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். கிழக்கில் தனது வாக்கு வங்கியைப் பலப்படுத்துவதற்காக சாணக்கியனின் அணி இலத்திரனியல் ஊடகங்களை வெற்றிகரமாகக் கையாளுகின்றது. ஈழத் தமிழர்களின் வெளியுறவு நடவடிக்கைகள் பொறுத்தும் அவ்வாறான கருத்துருவாக்கக் கட்டமைப்புகளை ஈழத் தமிழர்கள் உருவாக்க வேண்டும். தேர்தல் நோக்கு நிலையில் இருந்தன்றி தேசத்தைக் கட்டி எழுப்புவது என்ற நோக்கு நிலையிலிருந்து அவ்வாறான கட்டமைப்புகளை உருவாக்கினால்தான் மேற்சொன்ன அனைத்துலக வாய்ப்புகளை வெற்றிகரமாகக் கையாளலாம். இல்லையென்றால் வெறுவாய் சப்பிக்கொண்டு வெளியாருக்காகக் காத்திருக்கும் அரசியல்தான் தொடர்ந்துமிருக்கும்.

## மூத்தோரைத் துதி செய்வோம்

மூத்தோர் என்பவர் யார்?
மூலையில் முடக்கப்பட வேண்டியவர்களா?
மூத்தோர் இல்லத்தில் அடைக்கப்பட வேண்டியவர்களா?
முதுமை என்பது வாழ்வின் முடிவல்ல
முதுவேனியில் வரும் முழுமதியின் தொடக்கம்
முற்றும் துறந்த முனிவரல்ல முதியோர்
முற்றிப் பழுத்த முக்கனி அவர்கள்
இளைஞரே எண்ணிப் பாருங்கள்
உங்கள் இறந்த காலத்தை
ஏறிவந்த ஏணியை ஒருமுறை திரும்பிப் பாருங்கள்
உங்கள் ஏற்றம்தரு வாழ்வுக்கு ஏதுவாய் இருந்தவரை
ஏதிலிகளாக்கி எமனுக்கு இரையாக்காதீர்
"காவோலைவிழக் குருத்தோலை சிரித்தகதை தெரியுமா?"
காலம் ஒருநாள் உம்மையும் காவோலை ஆக்கும்
மூத்தோர் விடும் கண்ணீர்
உம்மைச் செந்நீர் விடவைக்கும்
கங்கையில் மூழ்கிக் குளித்தாலும் கரையாது உம்பாவம்
முதிய தம்பதியரை ஒன்றாக வாழவிடுங்கள்
முதிய வயதிற்தான் முக்கியமாய்த் துணைதேவை
பாசமாய்வாழ வழிசெய்து கொடுங்கள்
பாகப் பிரிவினை செய்து பங்கு போடாதீர்கள்
பாரபட்சம் காட்டாமல் பக்குவமாய்ப் பாருங்கள்
பழிச்சொல்லுக் கேட்காமல் பண்பாக நடவுங்கள்
"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"
நாளை நீரும் மூத்தோர் ஆவீர்
நன்றாய் மூத்தோர் நலம் காத்து
நானிலம் வாழ்த்த வாழ்ந்திடுவீர்.

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

இலங்கை செய்திகள்
Sri Lanka News




# பாடசாலை மாணவனை பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய அதிபர் வழக்கில் 9 ஆண்டுகளின் பின் தீர்ப்பு

- மன்னார் நிருபர் (12-09-2023)

பதின்ம வயது மாணவனை பாரதூரமான பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய பாடசாலை அதிபருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் தீர்ப்பளித்துள்ளார்.

"தனது கட்டுகாவலில் உள்ள மாணவர்களுக்கு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவது பாரதூரமான குற்றமாகும். தற்போது அதிகரித்து வரும் இத்தகைய செயற்பாடுகளுக்கு கடும் தண்டனை வழங்கப்படுவது அவசியம்." என்று மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹால் தீர்ப்பில் கோடிட்டு காட்டினார்.

2014ஆம் ஆண்டு செப்டெம்பர் 23ஆம் திகதி மன்னார் பாடசாலையில் கற்ற 10 வயது மாணவன் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மாணவன் கல்வி கற்ற பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டார்.

மன்னார் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற சுருக்க முறையற்ற விசாரணைகளின் பின் சட்ட மா அதிபரினால் மன்னார் மேல் நீதிமன்றில் பாடசாலை அதிபருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹால் முன்னிலையில் விளக்கம் இடம்பெற்ற நிலையில் திங்கட்கிழமை (11) வழக்கு தீர்ப்புக்காக நியமிக்கப்பட்டது.

எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிகழ்வு - நிபுணத்துவ சாட்சியங்கள் ஊடாக நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநரினால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் குற்றவாளி எனக் கண்டு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

"குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்படுகிறது, செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். பாதிக்கப்பட்ட மாணவனுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். வழங்கத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்" என்றும் மன்னார் மேல் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பளித்தது.

வழக்குத் தொடுநர் சார்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி செஸான் மஹ்பூம் வழக்கை நெறிப்படுத்தினார்.

# வட மாகாண ரீதியாக இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் சாதனை படைத்த மன்னார்/புனித சவேரியார் கல்லூரி சாதனையாளர் கௌரவிப்பு



வட மாகாண ரீதியாக இடம்பெற்ற 2023 ஆண்டுக்கான பாடசாலை ரீதியான விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெற்ற மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு 12-09-2023 அன்று பாடசாலை அதிபர் அருட்சகோதரர் S.சந்தியாகு FSC தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

கடந்த வாரம் முழுவதும் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டு நிகழ்வில் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி 80 புள்ளிகளை பெற்று ஆண்கள் பிரிவில் மன்னார் வலயத்தில் முதலாம் இடத்தையும், மாகாண ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்று மன்னார் வலயம் மாகாண ரீதியாக முதல் நிலையை பெற்றுக்கொள்ள வழி வகுத்திருந்தது.

இந்த நிலையில் குறித்த மாகாண போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் மன்னார் வலய உதவி கல்வி பணிப்பாளர் ஞானராஜ் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது.

குறித்த மாகாண விளையாட்டு போட்டிகளில் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி 3 தங்கப் பதக்கங்களையும், 3 வெள்ளி பதக்கங்களையும், 2 வெண்கல பதக்கங்களையும், 6 நான்காம் இடங்கள், மற்றும் 2 ஐந்தாம் இடங்களை பெற்று கொண்டது.





மேலும், குறித்த போட்டிகளில், 12 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான அஞ்சலோட்ட போட்டியில் மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்கள் புதிய மாகாண சாதனையை நிலை நாட்டியதோடு, 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மாணவன் ப்ரோமியன் மாகாண சாதனையை சமன் செய்திருந்தார்.

இந்த நிலையில் வெற்றி பெற்ற மாணவர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் பதக்கங்கள் மற்றும் வெற்றி கிண்ணங்களும் கையளிக்கப்பட்டது.

# தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு நல்லூர் ஆலய முன்றலில் விசேட வழிபாடு

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு செப்-12 ஆம் திகதியான இன்று, மிக நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள 17 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலையை வேண்டி, குரலற்றவர்களின் குரல் அமைப்பு, நல்லூர் ஆலய முன்றலில் 17 தேங்காய்களை உடைத்து விஷேட வழிபாட்டினை மேற்கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், முன்னாள் அரசியல் கைதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டுள்ளனர்.



இதன்போது கருத்து வெளியிட்ட குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் அவர்கள், "மூன்றரை தசாப்த காலமாக நீடித்த யுத்த சூழலின் ஒற்றைச்சொல்லாக "தமிழ் அரசியல் கைதிகள்" என்கின்ற பேசுபொருள் இதுவரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இதற்கு, அரசு உடனடியாக முற்றுப்புள்ளியிடவேண்டும்.

அதைவிடுத்து, கவனயீர்ப்பு போராட்டங்களிலும் கருத்துப் பரிமாற்றங்களிலும் ஈடுபட்டவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து, பின்னர் அவ்வாறானவர்களை பிணையில் விடுவித்துவிட்டு, "நாம் நூற்றுக் கணக்கானவர்களை விடுதலை செய்துள்ளோம்" என சர்வதேச அரங்கில் உரத்துக்கூறிவருகிறது அரசு. ஆனால், 15 முதல் 28 ஆண்டுகளாக 17 தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர்.



ஆகவே, உண்மை நிலையை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும்.

வெறுமனே அறிக்கையிடலோடு மாத்திரம் தமது மனித உரிமை செயற்பாடுகளை மட்டுப்படுத்திக்கொள்ளாது இலங்கை அரசுக்கு தொடர் அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டும்.

இதனூடாகவே போர் ஓய்ந்த நாட்டில் நிரந்தரமான நல்லிணக்கத்தை உறுதிசெய்யமுடியும்" என தெரிவித்துள்ளார்.

# சேனையூர் அனாமிக்கா பண்பாட்டு மையத்தில் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

இரட்ணம் பவுன்டேசன் UK மற்றும் வன்னி ஹோப் AUSTRALIA ஆகிய நிறுவனங்கள் இணைந்து கணினி பயிற்சி நடாத்தி பயிற்சி நெறியினை நிறைவு செய்த முதலாம் வருட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சேனையூர் அனாமிக்கா பண்பாட்டு மையத்தில் அதன் ஸ்தாபகர் பேராசிரியர் பாலசுகுமார் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

கிராமப்புரங்களில் டிஜிட்டல் கல்வியை மேம்படுத்துவதில் இரட்ணம் பவுன்டேஷன் மற்றும் வன்னி ஹோப் நிறுவனங்களின் சேவைகள் மகத்தானதாகும் என வன்னி ஹோப் நிவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரீ.எம். பாரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில கணனி அறிவினை விருத்தி செய்யும் பணிகளில் இரட்ணம் பவுன்டே'ன் மற்றும் வன்னி ஹோப் நிறுவனங்கள் செயற்பட்டுவருவதில் நாம் பெருமை கொள்கின்றோம். நம் இளைஞர் சமூகத்தினுடைய எதிர்காலம், தொழில் வாய்ப்புகள், தொழில் சார் தகைமைகள் என்பவற்றினைக் கருத்திற் கொண்டு கணனி வளநிலையம் ஒன்றை மூதூர் பிரதேசத்தில் ஸ்தாபித்து இப்பிரதேச இளைஞர்கள், பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள், தொழில் தேடிக் கொண்டிருப்போர், மாணவர்கள் போன்ற பல்வேறுமட்ட தரப்பினருக்கு கணனி கற்கையை வழங்கிவருகின்றோம். இந்த கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருப்பதானது எமது செயற்றிட்டத்தின் ஒரு மைல்கல் எனலாம்.




பயிற்சி நெறியினை நிறைவுசெய்த மாணவர்கள் அடுத்த கட்ட தொழில் சார் தகமையை தொடருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த மகத்தான சேவையில் சேனையுர் அனாமிக்கா பண்பாட்டு மையம் எங்களுடன் கைகோர்த்திருப்பதை நாங்கள் ஒரு பலமாகவே பார்கின்றோம். இந்த பணிக்காக உதவி வரும் இரட்ணம் பவுண்டேஷன் நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி நித்தியானந்தன், வன்னி ஹோப் நிறுவனத்தின் ஸ்தாபர் திரு. ரஞ்சன் சிவஞாணசுந்தரம் மற்றும் அனாமிக்கா பண்பாட்டு மையத்தின் ஸ்தாபகர் பேராசிரியர் பாலசுகுமார் ஆகியோருக்கு நன்றியை இவ்விடத்தில் கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றேன்.





இந்த நிகழ்வுக்கு அதிதியாக வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் செயலாளரும் பணிப்பாளருமான வைத்தியர் மாலதி வரன் அவர்களும் அனாமிகா பண்பாட்டு நிலையத்தின் உத்தியோகத்தர்கள் வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் சான்றிதழ் பெறுகின்ற மாணவர்கள் கல்வி பயில்கின்ற மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடாத்தியிருந்தால் ஈஸ்டர் படுகொலை தடுக்கப்படிருக்கும் — சபா குகதாஸ்

2009 முள்ளிவாய்க்காலில் மிகக் கோரமாக நடந்த தமிழ் இனப்படுகொலைக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச விசாரணை மூலம் நீதி வழங்கப்படிருந்தால் 2019 உயிர்த்த ஞாயிறு படுகொலை நடைபெற சந்தர்ப்பம் கிடைத்திருக்க வாய்ப்பில்லை என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

09-09-2023 சனிக்கிழமை அன்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஈஸ்டர் படுகொலைக்கான ஆதாரம் சனல் 4 தொலைக்காட்சியில் வெளியாகிய பின்னர் பாராளுமன்றத்தில் பல குரல்கள் ஆளும் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்களிடையே சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என மேலேழுந்தன. இது ஒருவகையில் சிலரது அரசியல் உள் நோக்கமாக இருந்தாலும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதற்கு தமிழர்களிடம் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் தென்னிலங்கையில் கர்தினால் உட்பட தற்போது கதறும் தரப்புக்கள் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்கின்றனர்.

அன்று முள்ளிவாய்க்கால் படுகொலையை அரங்கேற்றிய அதே தரப்பினர் தான் ஈஸ்டர் படுகொலையை அரங்கேற்றினார்கள் என்பது தற்போது நிரூபணமாகிவிட்டது ஆகவே அன்று முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு சர்வதேச விசாரணை மேற் கொண்டு நீதி வழங்கியிருந்தால் உயிர்த்த ஞாயிறு படுகொலை நடந்திருக்க மாட்டாது.

எதிர்வரும் காலத்திலும் வேறு வடிவங்களில் ஆட்சிக் கதிரையைப் பிடிக்க இப்படியான நிகழ்வுகள் அரங்கேற்றப்படலாம் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கும் உயிர்த்த ஞாயிறு படுகொலைக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

வணக்கத்திற்குரிய கர்தினால் மல்க்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இன்று கூவும் தென்னிலங்கைத் தரப்புக்கள் முதலில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணையை கோருங்கள் உயிர்த்த ஞாயிறு படுகொலைக்கு தானாகவே நீதி கிடைக்கும் அத்துடன் தங்கள் சுயலாபத்திற்காக மக்களை கொன்றெழிக்கும் கலாசாரத்திற்கு அதனை மேற் கொள்ளும் சூத்திரதாரிகளின் செயற்பாடுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாகாணமட்டத்தில் புதிய சாதனை நிலைநாட்டிய மன்/ தட்சனாமருதமடு மகா வித்தியாலய மாணவி



- மன்னார் நிருபர் (09-09-2023)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகள போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்ற நிலையில் 08-09-2023 அன்று இடம்பெற்ற 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 300 மீற்றர் தடைதாண்டல் போட்டியிலே மடு கல்வி வலயத்திற்குட்பட்ட தட்சனாமருதமடு மகா வித்தியாலய மாணவி யோ. சுடர்மதி புதிய சாதனையை (record break) நிலைநாட்டியுள்ளார்.

2018 ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் மாணவி ஒருவர் குறித்த நிகழ்வினை 51.7 செக்கன்களில் முடித்து சாதனை நிகழ்த்தி இருந்தார்.

அதனை 08-09-2023 இடம்பெற்ற போட்டியில் யோ. சுடர்மதி 50.08 செக்கன்களில் ஓடி முடித்து புதிய மாகாண சாதனையை நிலை நாட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மன்னார் பேசாலை சென்மேரிஸ் பாடசாலை பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து மாபெரும் நிகழ்வு ஒன்றை முன்னெடுப்பு



(09-09-2023)

மன்னார் பேசாலை கிராமத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை கொண்ட ஆரம்ப பாடசாலை யாக திகழும் மன்/ சென்மேரிஸ் பாடசாலை பழைய மாணவர் சங்கம் ஒன்றை அமைக்கும் நோக்கிலும் குறித்த பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நோக்கிலும் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து மாபெரும் நிகழ்வு ஒன்றை இன்று முன்னெடுத்தனர்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒன்று திரண்டு மாபெரும் நிகழ்வு ஒன்றை இன்று முன்னெடுத்தனர்.

குறித்த நிகழ்வு சென்மேரிஸ் பாடசாலையில் அதிபர் செபஸ்டியான் ராஜேஸ்வரன் பச்சேக் தலைமையில் இடம்பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை (09-09-2023) காலை பழைய மாணவர்கள் ஒன்று திரண்டு பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்திலிருந்து மோட்டார் வண்டி மற்றும் நடை பவனியாக பிரதான வீதி மற்றும் பேசாலை கிராமம் வீதி வழியாக சென்மேரிஸ் பாடசாலை யை வந்தடைந்தனர்.

பின்னர் அவர்கள் வரவேற்கப்பட்டு, ஒன்று திரண்ட மாணவர்கள் விளையாட்டு போட்டி மற்றும் கலை நிகழ்வுகளில் ஈடுபட்டதோடு வலுவான பழைய மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.






இதன் போது குறித்த பாடசாலையில் இதுவரை ஆசிரியர்களாக கடமை புரிந்த பேசாலை கிராமத்தின் ஆசிரியர்களும் இன்று கௌரவிக்கப் பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

குறித்த பழைய மாணவர்களால் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் அதிக மாணவர்களை கொண்ட பாடசாலையாகவும் முதன்மை பாடசாலையாகவும் குறித்த சென்மேரிஸ் ஆரம்ப பாடசாலை சிறப்பு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்று முன்னெடுக்கப்பட்ட பழைய ஆண்டு பிரிவு மாணவர்கள் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் பேசாலை பங்கு தந்தை ஏ. அன்ரன் அடிகளார் உட்பட ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக ஆய்வு கூடத்திற்கு விஜயம் செய்த யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் நட்ராஜ் ஜெயபாஸ்கரன்





கடந்த செவ்வாய்க்கிழமை (05-09-2023) யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி வீதியில் உள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக ஆய்வு கூடத்துக்குச் சென்ற இந்திய துணைத் தூதுவர் ஊடகத் துறையின் மேம்பாடு குறித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஊடக ஆய்வு கூடத்தின் செயற்பாடுகளை விளக்கியதுடன், ஊடக ஆய்வு கூடத்தில் உள்ள வசதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக விபரித்தார்.

மாணவர்களுடன் உரையாடலில் ஈடுபட்ட இந்திய துணைத் தூதுவர் கற்கைகள் தொடர்பான மாணவர்களின் தயாரிப்புகளைப் பாராட்டியதுடன் மாணவர்களுக்கான பயிற்சிகளை நடத்துவதற்கு இந்தியாவில் இருந்து திரைப்பட இயக்குநர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்ற வளவாளர்களையும் அழைப்பதற்கான முன்மொழிவை ஊடக கற்கைகள் துறை சமர்ப்பிக்குமானால் சாதகமாக பரீசிலிப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது இந்திய துணைத் தூதரக அதிகாரி ரா. நாகராஜன், ஊடக கற்கைகள் துறைத் தலைவரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான பூங்குழலி சிறீசங்கீர்த்தனன், சிரேஸ்ட விரிவுரையாளர் ஜூட் தினேஷ் கொடுதோர், விரிவுரையாளர் அனுதர்சி கபிலன் மற்றும் ஊடக ஆய்வுகூட ஊழியர்கள் ஊடகத்துறை மாணவர்கள் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதர் அதிகாரிகளுடன் ஊடக ஆய்வு கூடத்திற்கு முதன்முறையாக விஜயம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல் திட்டத்தின் முதல் கட்டமாக 5 தொகுதிகள் மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டன



குடிநீர் வழங்கல் திட்டத்தின் முதல் கட்டமாக 5 குடிநீர் தொகுதிகள் மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டது.


கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுப்பதற்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

அந்த வகையில் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்தின் முதல் கட்டமாக 5 குடிநீர் தொகுதிகள் மக்கள் பாவனைக்காக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் 13.09.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், திணைக்கள அதிகாரிகள், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# தமிழ்நாடு "இசைக் கவி ரமணன் அவர்கள் "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றிய அற்புதமான நிகழ்வு





9ம் திகதி சனிக்கிழமை அன்று கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் மாலை 6.00 மணிக்கு தமிழ்நாடு "இசைக் கவி ரமணன்" அவர்கள் "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றிய அற்புதமான நிகழ்வு இடம்பெற்றது.

கனடா ஆரபி படைப்பகம் ஆதரவில் இந்த அற்புதமான நிகழ்வு மேடையேற்றப்பட்ட வேளையில் கனடா பைரவி நுண்கலைக் கூடத்தின் பாடக பாடகிகள் பாரதியார் பா பாடல்களை இசைக்கருவிகளின் பின்னணியில் பாடி சபையோரையும் "இசைக் கவி ரமணன்" அவர்களையும் மகிழ்வித்தனர்.

தமிழ்நாடு "இசைக் கவி ரமணன்" அவர்களை வாழ்த்தி கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் உரையாற்றினார். விழாவை ஆசிரியை கோதை அமுதன் அவர்கள் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

"பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில்ன சிறப்பாக உரையாற்றிய "இசைக்கவி ரமணன்" அவர்களை அனைவரும் பாராட்டிச் சென்றனர்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.























சினிமா

# ஏ.ஆர்.ரகுமானின் "மறக்குமா நெஞ்சம்" இசை நிகழ்ச்சி — மலிவான அரசியல் செய்கிறார்கள்

## - அவரது மகள் கதீஜா ரகுமான் வேதனை



தமிழ் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளரான ஏ.ஆர். ரகுமானின் "மறக்குமா நெஞ்சம்" இசை நிகழ்ச்சி செப்டம்பர் 10-ஆம் தேதி சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்றது. 25 ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதால் தள்ளு முள்ளு ஏற்பட்டது. பல ஆயிரம் கொடுத்து டிக்கெட் வாங்கியவர்கள் அரங்கத்திற்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சி சமூக வலைதளத்தில் பேசப்பொருளானது. இதையடுத்து ஏ.ஆர். ரகுமான் தவறுகளுக்கு வருந்துவதாக தெரிவித்திருந்தார்.

மேலும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் தவறுகளுக்கு பொறுப்பெற்று கொள்வதாக அறிவித்திருந்தனர். இந்த நிகழ்ச்சி மூலம் ஏ.ஆர். ரகுமான் ஊழல் செய்ததாக பலர் விமர்சித்து வந்த நிலையில் இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அவரது மகள் கதீஜா ரகுமான் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "இசை நிகழ்ச்சி மூலம் ஏ.ஆர். ரகுமான் ஊழல் செய்ததை போல சமூக வலைதளங்களில் பேசி வருகின்றனர். சிலர் இந்த விவகாரத்தில் மலிவான அரசியல் செய்து வருகின்றனர். நிகழ்ச்சியில் ஏற்பட்ட குளறுபடிகள் அனைத்திற்கும் நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் தான் 100 சதவீதம் காரணம். எனினும் ஏ.ஆர். ரகுமான் அதற்கு பொறுப்பெற்று கொள்வதாக அறிவித்திருந்தார். ஏ.ஆர். ரகுமான், வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில் 2016 -ஆம் ஆண்டு சென்னை, மதுரை, கோவை மாவட்டங்களில் "நெஞ்சே எழு" என்ற இசை நிகழ்ச்சி நடத்தியவர், கேரள மக்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது 2018- ஆம் ஆண்டு வெளிநாடுகளில் இசை நிகழ்ச்சி நடத்தி அதன் மூலம் உதவினார். கொரோனாவால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு பல உதவிகளை செய்தார். திரைத்துறையில் ஏழ்மை நிலையில் உள்ள லைட் மேன்களுக்கு உதவும் நோக்கில் இலவசமாக இசை நிகழ்ச்சி நடத்தினார். அவர் குறித்து பேசும் முன் இதனையெல்லாம் யோசித்து பேசுங்கள்" என பதிவிட்டுள்ளார்.






OM NAMO NARAYANA

125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM L3S 3T8 CANADA

Mobile & WhatsApp: 001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகர்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது தீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்னுடைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், தீசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களை முடிவுக்கு கொண்டுவர சகல தரப்பினையும் அழைத்து அவசர மாநாடு கூட்டுக! - தமுகூ தலைவர் மனோ, ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்

இலங்கையில் அண்மைக்காலமாக இந்திய வம்சாவளி மலையக தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தினரால் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஐ நா அறிக்கையின்படி தோட்ட தொழிலாளர்களே இலங்கையில் மிகவும் வறுமை மற்றும் பின் தங்கிய நிலையில் உள்ளனர். நாட்டின் சமூக-பொருளாதர குறியீடுகளின் அடிப்படையில் அந்த மக்கள் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இந்நிலையில் மலையக மக்கள் மீது தோட்ட நிர்வாகத்தினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவ்வகையில் இரத்தினபுரி மாவட்டத்திலும் சமீபத்தில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு தோட்ட தொழிலாளி ஒருவரின் வீடு நிர்வாகத்தினரால் உடைத்தெறியப்பட்ட கானொளி ஒன்று வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இப்படியான சம்பவங்களை கண்டித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். இது தொடர்பில் அவர் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

"இரத்தினபுரி மாவட்ட காவத்தை பெருந்தோட்ட நிறுவன வெள்ளந்துரை தோட்டம், இதற்கு முன் மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் முடிவுக்கு வரவில்லை. இவை தொடர்கின்றன. இரத்தினபுரி, மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன, "பெருந்தோட்டங்களுக்கு உள்ளே செயற்பட முடியவில்லை. தயவு செய்து அரசியல் உயர் மட்டத்தில் பேசி நடைமுறை அதிகாரத்தை பெற்றுத்தாருங்கள்" என என்னிடம் கோரினார். பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண "இந்த கம்பனிகாரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை" என்று ஜனாதிபதியிடம் முறையிடும்படி என்னிடம் கூறினார்.

"இவை தொடர்பில் உங்களிடம் தொலைபேசியில் நேற்றிரவு உரையாடிய போது, எழுத்து மூலமான ஒரு முன்மொழிவை தரும்படி கேட்டீர்கள். அதன்படி அனைத்து தரப்பினரையும் அழைத்து அவசர மாநாடு நடத்தி, இந்த தாக்குதல் சம்பவங்களுக்கு நிரந்தரமான தீர்வை காணும்படி உங்களை மூலம் கோருகிறேன்" என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனோ கணேசன் எம்பி தன் கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது, ஜனாதிபதி, பொது நிர்வாக அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன, பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, பொலிஸ்துறை அமைச்சர் டிரான் அலஸ், அரசு - எதிரணி தரப்புகளை சார்ந்த ஒன்பது மலையக எம்பிக்கள், கொழும்பு - களுத்துறை - கேகாலை - இரத்தினபுரி - நுவரேலியா - கண்டி - மாத்தளை - பதுளை - மொனராகலை - காலி - மாத்தறை - குருநாகலை ஆகிய 12 மாவட்டங்களின் செயலாளர்கள், பொலிஸ் மாஅதிபர், 22 பெருந்தோட்ட நிறுவன மேலாளர்கள், உள் குத்தகை பெற்றுள்ள தோட்ட நிறுவன மேலாளர்கள், 3 அரச பெருந்தோட்ட அதிகாரிகள், மலையக சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவசர மாநாட்டை நடத்தி நிரந்தர தீர்வை காணுங்கள்.

இரத்தம், வியர்வை சிந்த இந்நாட்டை வளப்படுத்திய பெருந்தோட்ட மக்கள், இன்று 200 வருடங்களை இந்நாட்டில் நிறைவு செய்கிறார்கள். இந்நாட்டுக்கு அவர்களின் அவர்களது குறைத்து மதிப்பிட முடியாதது. மலையக தமிழர்கள் மத்தியில் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற இம்மக்கள், எனது தொகுதி கொழும்பு அவிசாவளை முதல் சுமார் பன்னிரெண்டு மாவட்டங்களில் படும்பாடு மிக மோசமானதாகும். நீதிமன்ற ஆணை இல்லாமல் அவர்களது வீடுகள் உடைக்கப்படுகின்றன. ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்கள் இப்போது பரவலாக நடைபெறுகின்றன. பல சம்பவங்கள் பகிரங்கமாவதில்லை. ஒருசிலவே வெளியில் தெரிய வருகின்றன.

தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வசிப்பிட, வாழ்வாதர காணி உரிமை தொடர்பில் நாம் கூடி பேசி கொள்கை முடிவு எடுக்க வேண்டும். அவை மாவட்ட செயலாளர்களுக்கும், பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். தயவு செய்து அவசர மாநாட்டை உங்கள் தலைமையில் கூட்டுங்கள்.

**தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை**
**දමිළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව**
**Tamil Progressive Alliance - SriLanka**

From office of:
Leader of Tamil Progressive Alliance (TPA)
Leader of Democratic People's Front (DPF)
Member of Parliament of Sri Lanka for Colombo District
Immediate Former Minister of National Integration, Official Languages, Social Progress and Hindu Affaires

HE Ranil Wickramasinghe
President

Your Excellency,

Untoward incident at Wellandura estate of Kahawatta plantations Ratnapura yesterday 10th Sept

An army of not less than ten men clad in civil attire projecting themselves as state security officials using sticks violently ransacked a small make shift habitat of Mr. Ramesh Udayakumar, head of a vulnerable plantation family.

The nation saw such an incident at Matale Ratwatte Estate a month before where assistant manager of the estate ransacked similar habitat.

Both incidents occurred without any judicial eviction order of Hon. Courts. Hence, the goons have taken the law into their hands. There are many such incidents almost on a daily basis in the plantations managed by state and private enterprises.

Such incidents of barbaric attacks on the plantation community even after 200 years of their arrival in this country is not only appalling but also very shameful for the nation as a whole. The contribution of the plantation sector people for the development of the country can never be underestimated, as it is their blood and sweat which built the nation.

Lately such attacks, what started as isolated incidents are spreading across the plantation area. The UN and other international agencies have time and again pointed out the Indian Origin Tamils in the plantation sector are the most vulnerable in the country. Such high handedness of the estate managers cannot be and should not be permitted at any cost. A stern action by the state and a change in the policy is much needed.

I appeal to you to bring an immediate halt these occurrences before such goes out of hand towards further breakage of law and order.

I spoke to the district secretary of Ratnapura district. He tells me that his authority doesn't cut much within the plantations. The pubic administration Minister of plantations Hon. Ramesh Pathirana is an honorable politician who understands the plight of the people. But he informed me of his difficulties in dealing with the plantation managements during such crises. This is the sad state of affairs. We request you to change the system that brings the plantations with the national public administration mainstream.

Therefore, your excellency, I very kindly request you to convene an emergency conference of all following stakeholders. I propose we shall decide on a moratorium of managements interfering in the livelihood of the plantation residents other than matters linked to their employment.

I propose the following state holders at the conference;

1) Hon. Dinesh Gunawardena Prime Minister and Minister of public administration
2) Hon. Ramesh Pathirana Minister of Plantations
3) Hon. Tiran Ales Minister of Law and Order
4) Honorable MPS. V. Radhakrishnan, Palani Thigambaram, M. Velukumar, M. Uthayakumar of the TPA
5) Honorable Minister Jeewan Thondaman MP, K. Rameshwaran MP of the CWC
6) Honorable Minister Arvinda Kumar MP
7) Hon MP Suresh Vadivelu of SJB

(Above are MPs who directly represent this community. There are other MPs who too obtained franchise from the 12 districts where plantations are located.)

8) District secretaries of Colombo, Kalutara, Kegalle, Ratnapura, NuwaraEliya, Kandy, Matale, Badulla, Monaragala, Galle, Matara and Kurunagala.
9) The IGP
10) All the CEO of the 22 RPCs
11) CEOs of the subleased Plantation management companies
12) Chairpersons of 03 state owned plantation enterprises
13) Civil Society members working amidst plantation community

I appreciate your time and consideration in this matter.

Truly,

Mano Ganesan
Leader -TPA
September 11, 2023 Colombo Sri Lanka

Office: #72 Bankshall Street Colombo 11 Sri Lanka - Phone: +94112473511
Residence: #24 Sri-Maha-Vihara Rd, Off Dutu-Gemunu St, Pamankada, Dehiwela Sri Lanka

Mobile (Direct): +94777312770
Email (Direct): leader@dpflanka.org

Pvt. Secretary- Ms. Priyani (Mobile): +94773133839
Office Secretary-Mr. Haran (Email): haran@dpflanka.org;
PSO-Mr. Jayawardena (Mobile): +94772456895



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI
## Pawn Brokers



30 வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.**™

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198


EASY FURNITURE
Summer
BLOWOUT SALE
LOWEST PRICE IN TOWN
READY TO DELIVER
STARTING FROM $59
Queen Diamond Firm Mattress $499 $299
Rest-O-Pedic Queen $309 $249
S/S BUNK Bed (Grey) $709 $399
Dreamopedic Single Mattress $249 $149
Velvet Rose Queen Mattress $309 $299
Back Support Queen Mattress $709 $549
Spine Comfort Queen Mattress $609 $499
5" Foam $79 $59
ANG L Sofa Grey& Brown $650 $399
4 Door Wardrobe $899 $599
2 Door Wardrobe With Glass Mirror $449 $349
2 Door Wardrobe $309 $249
Sami Madam
Price Starting from $149
We Can Make Special Order
CALL US TODAY
416-293-9204
3500 McNicoll Ave, Unit 5
Scarborough, ON M1V 5C7
EASY FURNITURE
WHOLESALE PRICE
REM L Sofa $699 $499
SAI L Sectional (with ottoman) $1299 $899
JANE Sectional (Bk-WH-RD) $1699 $1299
UG RED Sectional $1199 $899
MOREN Sectional Sofa $1249 $899
GRASSY 3 pcs Sofa $1199 $899
Easy Air Leather Corner Sofa $2499 $1999
Sky Power 3 pcs Recliner Sofa $2999 $2499
EF QUEEN Bedroom Only $999 $799
Single Bed $199 $149
5 pcs Dining Table $709 $499
6 pcs Bedroom $899 $599
5pcs Dining Table $709 $499
7 pcs Dining Table $709 $549
Coffee Table $149 $99
Bar Stool $99 $59
STARTING FROM $59
ORDER TODAY 416-293-9204
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7


September
17
Ticket $10
Can be purchased at
the entrance.
Woodside Square Cinemas
Scarborough
Sunday 17th September at 1.30pm


www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
UTHAYAN CULTURAL SHOW - 2023
and 27th Year Celebration
tasty தமிழா
Presents
உதயன் பல்சுவைக் கலைவிழாவும்
விருது வழங்கலும்-௨௦௨௩
DATE: 15-10-2023 Sunday
TIME: 6:00 PM
VENUE:
Thamil Isai Kalaamanram of Ontario
1120 Tapscott Road #3
Scarborough, ON M1X 1E8
கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
வழங்கும் மெல்லிசை
இவ்வருடத்தின் சிறப்புப் பாடகராக
"பொன்னியின் செல்வன்" புகழ்
வி. எம். மகாலிங்கம் அவர்களும்
கனடியப் பாடக பாடகிகளும்
மேடையை அலங்கரிப்பார்கள்
POWERED BY:
VIBRANT HOSPITALITY GROUP
Latika Gold House
ARABI
FINDER
TICKETS
VIP $15
For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512

# பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களை முடிவுக்கு கொண்டுவர சகல தரப்பினையும் அழைத்து அவசர மாநாடு கூட்டுக!

### பாராளுமன்ற உறுப்பினர் மனோ, ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்



இலங்கையில் அண்மைக்காலமாக இந்திய வம்சாவளி மலையக தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தினரால் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஐ நா அறிக்கையின்படி தோட்ட தொழிலாளர்களே இலங்கையில் மிகவும் வறுமை மற்றும் பின் தங்கிய நிலையில் உள்ளனர். நாட்டின் சமூக-பொருளாதர குறியீடுக-ளின் அடிப்படையில் அந்த மக்கள் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இந்நிலையில் மலையக மக்கள் மீது தோட்ட நிர்வாகத்தினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவ்வகையில் இரத்தினபுரி மாவட்டத்திலும் சமீபத்தில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு தோட்ட தொழிலாளி ஒருவ-ரின் வீடு நிர்வாகத்தினரால் உடைத்தெறியப்பட்ட கானொளி ஒன்று வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இப்படியான சம்பவங்களை கண்டித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். இது தொடர்பில் அவர் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

”இரத்தினபுரி மாவட்ட காவத்தை பெருந்தோட்ட நிறுவன வெள்ளந்துரை தோட்டம், இதற்கு முன் மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவங்கள் முடிவுக்கு வரவில்லை. இவை தொடர்கின்றன. இரத்தினபுரி, மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன, “பெருந்தோட்டங்களுக்கு உள்ளே செயற்பட முடியவில்லை. தயவு செய்து அரசியல் உயர் மட்டத்தில் பேசி நடைமுறை அதிகாரத்தை பெற்றுத்தாருங்கள்” என என்னிடம் கோரினார். பெருந்தோட்ட அமைச்சர் ரமே‘ பத்திரண “இந்த கம்பனிகாரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை” என்று ஜனாதிப-தியிடம் முறையிடும்படி என்னிடம் கூறினார்.

”இவை தொடர்பில் உங்களிடம் தொலைபேசியில் நேற்றிரவு உரையாடிய போது, எழுத்து மூலமான ஒரு முன்மொழிவை தரும்படி கேட்டீர்கள். அதன்படி அனைத்து தரப்பினரையும் அழைத்து அவசர மாநாடு நடத்தி, இந்த தாக்குதல் சம்பவங்களுக்கு நிரந்தரமான தீர்வை காணும்படி உங்களை மூலம் கோருகிறேன்” என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனோ கணேசன் எம்பி தன் கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது,

ஜனாதிபதி, பொது நிர்வாக அமைச்சர் பிரதமர் தினே‘ குணவர்தன, பெருந்தோட்ட அமைச்சர் ரமே‘ பத்திரண, பொலிஸ்துறை அமைச்சர் டிரான் அலஸ், அரசு-எதிரணி தரப்புகளை சார்ந்த ஒன்பது மலையக எம்பிக்கள், கொழும்பு-களுத்துறை-கேகாலை-இரத்தினபுரி-நுவரேலியா-கண்டி-மாத்தளை-பதுளை-மொனராகலை-காலி-மாத்தறை-குருநாகலை ஆகிய 12 மாவட்டங்களின் செயலாளர்கள், பொலிஸ் மாஅதிபர், 22 பெருந்தோட்ட நிறுவன மேலாளர்கள், உள் குத்தகை பெற்றுள்ள தோட்ட நிறுவன மேலாளர்கள், 3 அரச பெருந்தோட்ட அதிகாரிகள், மலையக சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அவசர மாநாட்டை நடத்தி நிரந்தர தீர்வை காணுங்கள்.

இரத்தம், வியர்வை சிந்த இந்நாட்டை வளப்படுத்திய பெருந்தோட்ட மக்கள், இன்று 200 வருடங்களை இந்நாட்டில் நிறைவு செய்கிறார்கள். இந்நாட்டுக்கு அவர்களின் அவர்களது குறைத்து மதிப்பிட முடியாதது. மலையக தமிழர்கள் மத்தியில் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற இம்மக்கள், எனது தொகுதி கொழும்பு அவிசாவளை முதல் சுமார் பன்னிரெண்டு மாவட்டங்களில் படும்பாடு மிக மோசமானதாகும். நீதிமன்ற ஆணை இல்லாமல் அவர்களது வீடுகள் உடைக்கப்படுகின்றன. ஆங்காங்கே நடைபெற்ற சம்பவங்கள் இப்போது பரவலாக நடைபெறுகின்றன. பல சம்பவங்கள் பகிரங்கமாவதில்லை. ஒருசிலவே வெளியில் தெரிய வருகின்றன.

தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வசிப்பிட, வாழ்வாதர காணி உரிமை தொடர்பில் நாம் கூடி பேசி கொள்கை முடிவு எடுக்க வேண்டும். அவை மாவட்ட செயலாளர்களுக்கும், பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டும். தயவு செய்து அவசர மாநாட்டை உங்கள் தலைமையில் கூட்டுங்கள்.

VOLUNTEERS NEEDED FOR A SERVICE ORGANIZATION

Tel: 647-762-9512
www.cyecstoronto.ca

C.Y.E.C.S
Center for Youth Empowerment & Community Services

Center for Youth Empowerment & Community Services in Scarborough, that is currently seeking Volunteers for service providing. We are giving the opportunity to individuals interested in the following areas:

- Office Administration
- Fundraising
- Conducting Seminars and Events
- Telemarketing
- Event Volunteering (i.e., backstage, door opener, ticket check)

We would like to give volunteering opportunities for those interested in gaining experience in the work field or want to work in a calm and supportive environment. We are more than happy to provide volunteer hours for high school students.

Applicants who are interested may contact us at infocyecs@gmail.com



விலா கருணா பெரியோர் இல்லம் வழங்கும்

# சந்தியாராகம் - 2023

# GOLDEN

*Super Singer*

**SEASON 5 GRAND FINALE**

HELPING HANDS SENIOR CARE VILLA KARUNA

**CREATIVE HEAD**

**16 SEP 2023 AT 4:30PM**

**THAMIL ISAI KALAAMANRAM**

1120 Tapscott Rd.,Unit#3 Scarborough,ON, M1X 1E8

Music by **The WIND**

*Nothing but music !*

## Main sponsors

RAMACHANDRAN LAW Professional Corporation

Lucaaa KITCHENS

FUNERAL SERVICE Chapel Ridge Funeral Home & Cremation Centre — CHRISTEEN SEEVARATNAM, Licensed Funeral Preplanner, 416-258-6759

COMPUTEK COLLEGE

Trinity Enterprise

## Event sponsors

Middlefield & Steeles Fresh Meat & Seafood — AKT

SUGSHE GROUP OF COMPANIES

Millennium Boutique

Fashion World Inc

Liberty@Kennedy Tax Office

Nallur Kumaran Inc.

opti-mart Family Owned & Operated Since 1988

REVITALEYES eye care — Dr. Mathuraa Sasitharan

SANTHA General Contracting Services

ERAA

PASUMAI Super Market

KIRUBA GANESH Certified Functional Nutrition Counselor

SPC

Canadian Women Council

## Finalists gift sponsors

Titans Realty Inc. — Guna Ponnampalam, Sales Representative. Cell: 416-648-7283, Bus: 416-289-2155, Fax: 416-289-2156

TAKE CONTROL OF YOUR BUSINESS — ARI A. ARIARAN, Chartered Professional Accountant

Dr. Sarah Antony, BHSc, BMBS, CCFP, Family Medicine Physician, Enhanced Skills in Obstetrics

MAHALALUXMI GOLD HOUSE

ABBA Maintenance Services Ltd. (Baba) Soma Kanagarasa. Cell: (416) 500-1142, Office: (905) 201-7433. Email: abbams@bellnet.ca, 92 Eastvale Drive, Markham, Ontario L3S 4S2

ISAIYA

HomeLife/Superstars Real Estate Ltd. Brokerage — Esa Para Esananda

DURHAM Car & Truck Rental — VJ Krish, 416.984.9436, 416.560.5655, 647.948.8771, 771 Warden Avenue, Scarborough, ON, M1L 4B7

## MEDIA SPONSORS

eet TV 24 Hours Tamil Television

தமிழ் Mirror www.tamilmirror.lk

timeFM உண்மையால் வெல்வோம்

east FM 102.7

உதயன் www.uthayannews.ca

cmr தமிழ் பண்பலை 101.3 FM & HD1

Tamilsguide www.tamilsguide.com

செந்தாமரை Senthamarai

Krishna LIVE TELECAST

yugam radio

# TICKETS $50


## Dinner provided

**FOR TICKET / MORE INFORMATION:**

**KIRUBA : 416 564 4366 / INDU/PARA: 416 282 4535 INDRANI : 416 200 6971**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1065

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
## கொக்குவில், யாழ்ப்பாணம்

இவ்வாறு மஞ்சவனப்பதி முருகன் எழுந்தருளி உலாவர சித்திரத் தேர் அமைக்கப்பட்ட பின்னர், 1939 ஆம் ஆண்டுமுதல் திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களே, இவ்வாலய தேர்த் திருவிழாவை சிறப்பாக நடத்தி வந்துள்ளார். அத்தோடு தேர்த்திருவிழாவன்று இடம்பெறும் மகேசுவர பூசையையும் பொறுப்பேற்று நிறைவேற்றியுள்ளார். அக்காலப்பகுதியில் தீர்த்தோற்சவத்தை திரு. கந்தர் குடும்பத்தினரும், பூங்காவனத் திருவிழாவை திரு. தம்பிமுத்து குடும்பத்தினரும் சிறப்பாகச் செய்துள்ளனர். வளர்ச்சியடைந்து வந்த மஞ்சவனப்பதி ஆலயத்தின் மகோற்சவ விழாக்களை, நீர்வேலியைச் சேர்ந்த உயர்குருக்கள் பீடம் நடத்தும் பாரம்பரியத்தைக் கொண்டதாக விளங்கியது. அக்காலப்பகுதியில் சிவஸ்ரீ அப்பாத்துரை குருக்களைத் தொடர்ந்து, சிவஸ்ரீ பிச்சுக் குருக்கள் மகோற்சவங்களைச் சிறப்பாக நடத்தியுள்ளதாக ஆலய வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேளையில் பிரம்மஸ்ரீ செல்லத்துரை குருக்கள் மகன் பிரம்மஸ்ரீ வைத்தியநாத ஐயர், தந்தையாருக்கு உதவியாக ஆலயத்தின் நித்திய. நைமித்திய பூசைகளை நடத்தி வந்துள்ளார்.

இவ்வாறான படிமுறைவளர்ச்சியின் அடுத்த கட்டமாக, மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு அழகிய கோபுரமொன்றினை அமைக்கும் திருப்பணி வேலைகள், 1944 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய ஆலய அமைப்பிலே கோபுரம் பிரதான இடத்தை வகிக்கின்றது. திருமந்திரம் கோபுரத்தின் தத்துவத்தினைப் போற்றுகின்றது.

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்.

வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்” என அழகாக கோபுர தத்துவத்தை எடுத்தியம்பியுள்ளது. திருக்கோயில் தரிசனத்திலே மனதிற்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் தருவது கோபுர தரிசனமாகும். ஆலயத்தின் தலைவாயிலில் வானுயர விளங்கும் இராஜகோபுரம், கலைமரபின் உன்னத நிலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதோடு, இறைவனது மகத்துவத்தையும் பெருமையையும் ஒருங்கே விளக்கி நிற்கின்றது. இராஜ கோபுரத்துடன் விளங்கும் ஆலயம் பரிபூரணத்தன்மையோடு காணப்படும். “கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” என்பது ஆன்றோர் வாக்கு. கோபுரத்தின் அமைப்பு, எரியும் சுடர் போன்று காணப்படும். இறைவனது வடிவமும் இத்தகையதென சமய நூல்கள் சுட்டியுள்ளன. கோபுரங்கள், இராஜகோபுரம், வல்லாள மகாராசன்கோபுரம், திருமஞ்சனக்கோபுரம், கிளிக்கோபுரம், கட்டைக்கோபுரம், மேற்குக்கோபுரம், அம்மணி அம்மாள் கோபுரம், ரிஷி கோபுரம் எனவும் காணப்படுகின்றன. கோபுரங்கள் ஒற்றை எண்ணிக்கை கொண்ட கலசங்களைக் கொண்டு விளங்குவதாக அமையும். மூன்று தளங்களைக் கொண்டவை மூவகை அவத்தைகளையும், ஐந்து தளங்கள், ஐம்பொறிகளையும், ஏழு தளங்களைக் கொண்ட கோபுரங்கள், ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றைக் குறிக்கும். ஐம்புல அனுபவங்களிலிருந்து படிப்படியாக எம்மை விடுவித்து, மனதைப் பரம்பொருளிடத்தில் உள்முகமாகச் செலுத்த கோபுர தரிசனம் ஆற்றுப்படுத்துகின்றது. கீழே அகன்று மேலே செல்லச் செல்ல படிப்படியாக ஒடுங்கிச் செல்லும் கோபுர அமைப்பானது, இறைவழிபாட்டினால் படிப்படியாக ஏற்படும் மனவொருமைப்பாட்டினைக் குறிப்பதாக அமையும்.

இத்தகைய பெருமைவாய்ந்த கோபரம், மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கும் வேண்டும் எனப் பலரும் விரும்பினர். இவர்களுள் முக்கியமானவர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளாவார். இவ்வாலய விழாக்களுக்கு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் அழைக்கப்பட்டு பிரசங்கம் செய்துள்ளார்கள். கந்தப்புராண விரிவுரை, மகாபாரதவிரிவுரை, இராமாயணவிரிவுரை, பெரியபுராணவிரிவுரை எனப் பலநாட்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பிரசங்கம் செய்துள்ளார்கள். திருமுருக கிருபானந்தவாரியார்சுவாமிகள் பிரசங்கம் செய்யும்பொழுது, “இக்கோயிலுக்கு அவசியம் ஒரு கோபுரம் அமைதல் வேண்டும்” எனப் பலமுறை கூறிவந்தார். அப்பொழுது சுவாமிகள் ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களையும், குமாரசாமிப்புலவர் அவர்களையும் அழைத்து - இக்கோயிலுக்கு கோபுரம் அமைப்பதற்கு நீங்கள் முயற்சித்தால் என்ன? எனக் கேட்டுள்ளார். அப்பொழுது அவர்கள் “திருவருட் சம்மதம் எப்படி இருக்குமோ அப்படி நடைபெறும்” என்று விடைகூறினர்.

பெரியோர்வாக்கு இறைவாக்கிற்குச் சமமானது என்பதற்கிணங்க, விரைவிலேயே மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கான கோபுரவேலைகள் திரு.ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களாலும், அவர்களது குடும்பத்தைச்சேர்ந்தவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டது. இராஜகோபுரவேலைகளை, அராலி தெற்குவாசியான நாகமுத்து ஸ்தபதியார் குழுவினர் சிறப்பாக நிறைவேற்றினர். அத்தோடு இராஜகோபுரத்திற்கு முன்பாக மணிமண்டபமும் அமைக்கப்பட்டு, மஞ்சவனப்பதி தேவஸ்தானத்திற்கு அழகையும், ஊர்மக்களுக்கு அருளையும் அள்ளிக்கொடுத்தது. மஞ்சவனப்பதிக்கு இராஜகோபுரம் அமைக்கப்படவேண்டும் என்பதில் மிக்க ஆர்வம்கொண்ட திருமுருககிருபானந்த வாரியார் சுவாமிகள், மஞ்சவனப்பதிமுருகன்மீது அளவற்ற பற்றும், பக்தியும் கொண்டவர். இவர் தனது கைப்பட எழுதிய நூலில் இதுபற்றி அழகாகக் குறிப்பிட்டுள்ளார். “நான் அனேகநாட்கள் பிரசங்கம் செய்த தேவஸ்தானம் ஒன்று உண்டெனில் அது யாழ்ப்பாணம் கொக்குவில் மஞ்சவனப்பதியேயாகும்” எனக் கூறியுள்ளார்.

இவ்வாலய கும்பாபிஷேகத்திற்கு வருவேன் எனக் கூறிச் சென்றவர், கும்பாபிஷேகம் நடைபெற்றபொழுது இறைவனடி சேர்ந்துவிட்டார். ஆயினும் அவரது திருவுருவத்தை வரைந்து அவரது ஆவலை நிறைவு செய்துள்ளார்கள். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுடைய அருளுரைகளைக் கேட்ட அன்பர்கள், ஆலய முன்னேற்றத்திலே அதிக சிரத்தை காட்ட ஆரம்பித்தனர். கொக்குவில் மஞ்சவனபதி ஆலய வரலாற்றில் 1959 ஆம் அண்டு குறிப்பிடத்தக்க மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்திய காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இவ்வாண்டிலேயே திரு.ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்டு ஐந்துபேர் கொண்ட தர்மகர்த்தாசபை அமைக்கப்பட்டது. இச்சபை ஆலய முன்னேற்றத்தில் ஆர்வங் கொண்டு உழைத்து, பல்வேறு பணிகளைச் செய்துள்ளது.

- வளரும்...

## ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள்

- சிவா பரமேஸ்வரன்



ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெற்ற போது, கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்தியாவும் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று சீனாவும் வலியுறுத்தின.

மனித உரிமைகள் தொடர்பான தனது பரிந்துரைகளை அமல்படுத்துமாறு அரசாங்கத்தை கோரும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளதுள்ள நிலையில், பல நாடுகளும்.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை குறித்து எழுத்து மூலமாக தனது அறிவிப்பை முன்வைத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளர் நடா அல் நஷிப், மனித உரிமை மீறல்கள், குறிப்பாக 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணைகள் மற்றும் வழக்குகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.

இந்த அறிக்கைக்கு பதிலளித்த ஜெனீவாவில் உள்ள ஐநாவிற்கான இலங்கையின் நிரந்தரப் வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி சுபாஷினி அருணதிலக, “எழுத்துமூல புதுப்பிப்பு, அதன் தீர்மானம் மற்றும் பரிந்துரைகளை நிராகரிக்கிறோம்” என்றார். மேலும், 46/1 மற்றும் 51/1 தீர்மானங்களை இலங்கை தொடர்ந்து நிராகரித்து வருவதாகவும், அது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் போரின் போது மற்றும் அதற்குப் பின்னரும் காணாமல் போனவர்கள உட்பட மனித உரிமை மீறல்களுக்கு “பொறுப்புப் கூறல் திட்டத்தை” அமைக்குமாறு அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளது எனவும் அவர் கூறினார்.

ஆணையாளரின் அறிக்கை, கொடூரமான உள்நாட்டுப் போருக்குப் பின்னர் இலங்கை முழுவதும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக புதிய உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கான அரசாங்கத்தின் முன்மொழிவை அங்கீகரிக்கும் அதேவேளையில், பிரதி உயர்ஸ்தானிகர் மேலும் பலவற்றைச் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

“யுத்தம் முடிவடைந்து பதினான்கு வருடங்களாக, உண்மை, நீதி மற்றும் பரிகாரத்திற்காக காத்திருக்கும் பல்லாயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் வேதனையிலும் துயரத்திலும் தொடர்ந்து தவிக்கின்றனர்” என அல் நஷிப் கூறினார். “உண்மையைத் தேடுவது மாத்திரம் போதுமானது அல்லவெனவும் மாறாக ஒரு சுயாதீனமான தற்காலிக விசேட நீதிமன்றம் உட்பட பொறுப்புக்கூறலுக்கான தெளிவான அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும்.”

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மான்ங்கள் தலையிடும் வகையிலும் துருவப்படுத்து வகையிலும் அமைந்துள்ளன. மேலும் அது ஆக்கபூர்வமற்ற மற்றும் வளங்களை வீணடிக்கும் ஒரு விடயமும் ஆகும் என்று கூறி, “இலங்கை அத்துடன் ஒத்துழைக்காது” என்றார்.

அதுமாத்திரமன்றி அந்த தீர்மானம் “நம்பகத்தன்மையற்ற ஒரு முடிவு” என்றும் கூறினார் இலங்கையின் தூதர்.

ஆணையாளரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் உறுப்புநாடுகள் பிள்வுபட்டிருந்தன. தீர்மானத்தை கொண்டு வந்த முக்கிய குழுவுடன் பெரும்பாலான மேற்குலக நாடுகள் பேரவையின் எழுத்துமூல புதுப்பிப்பை வரவேற்றதோடு அதனை செயற்படுத்துவதற்கு ஆதரவளித்தன.

இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகளான சீனாவும், பாகிஸ்தானும் ஆபிரிக்க நாடான புருண்டி, ஈரான், கசகஸ்தான் மற்றும் கம்போடியா போன்றவற்றுடன் இணைந்து இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்தன.

இந்தியாவின் பதில் சமாளிக்கும் வகையில் இருந்தபோதிலும், “வாக்குறுதிகள் மீதான முன்னேற்றம் போதுமானதாக இல்லை, மேலும் அதன் உறுதிமொழிகளை விரைவாக செயல்படுத்துவதில் அர்த்தமுள்ள வகையில் செயல்படுமாறு இலங்கையை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.” என இந்திய பிரதிநிதி குறிப்பிட்டார்.

தமிழர்களின் கௌரவம் மற்றும் கண்ணியத்தை உறுதிப்படுத்தும் வகையில் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என இந்தியா வலியுறுத்தியது.

இலங்கை மீதான 51/1 தீர்மானம் நேர்மை மற்றும் புறநிலை கொள்கையை பின்பற்றவில்லை எனக் கூறிய சீனா, “தேசிய இறையாண்மை, சுதந்திரம், சமூக ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் இலங்கையை உறுதியாக ஆதரிக்கிறோம்” எனக் கூறியது.

உறுப்பு நாடுகள் தவிர, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தமிழ் சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமைக் குழுக்களும் 90 வினாடிகளுக்குள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த தமிழ் சட்டத்தரணி வி.எஸ்.எஸ். தனஞ்சயன் தனது கருத்துரையில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவம் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதை எடுத்துரைத்தார்.

“2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், தமிழர்கள் இராணுவத்தை வெளியேற்றுமாறு அழைப்பு விடுத்தனர் மேலும் இராணுவத்தின் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும்” இல்லை எனவும் அவர் வலியுறுத்தினார்.

யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், தமிழர்களின் பூர்வீக தாயகத்தில் காணி அபகரிப்பு மற்றும் சிங்கள பௌத்தமயமாக்கல் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவை மீறி குருந்தூர்மலையில் பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறித்தும் பேரவையின் கவனத்திற்கு தனஞ்சயன் கொண்டுவந்தார்.

மற்றொரு மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமன ஸ்வஸ்திகா அருலிங்கம், 2019 ஏப்ரலில் நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிப்பதில் அரசாங்கத்தின் இயலாமை குறித்து கருத்து தெரிவித்தார்.

“உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளை நம்பத்தகுந்த முறையில் விசாரிக்கத் தவறியது, அந்த தாக்குதலில் அரசின் பாதுகாப்பு இயந்திரத்தின் உடந்தை பற்றிய அண்மைய வெளிப்பாடுகள் போன்றவை, உள்நாட்டுப் பொறிமுறைகளில் பொதுமக்களிற்கு சிறிதளவே நம்பிக்கை உள்ளது,” என அவர் தனது சமர்ப்பிப்பில் கூறினார்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக செயல்படு பேர்ள் (PEARL) என்ற மனித உரிமை அமைப்பு, இன்று இலங்கை போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கான நிகழ்ச்சி நிரல் ஆகியவற்றால் அறியப்படுகிறது என்று அதன் பிரதிநிதி தெரிவித்தார்.

“அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகள் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் முன்னெடுக்கப்படாதவரை கடந்தகால நிகழ்வுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும்” என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை, போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் கருத்துக்களையும் வடக்கு கிழக்கில் உள்ள யதார்த்தத்தையும் பிரதிபலிக்கவில்லை என தமிழர்கள் ஏற்கனவே நிராகரித்துள்ள நிலையில், இலங்கையின் கள நிலவரத்தை இது பிரதிபலிக்கவில்லை என இலங்கை அரசாங்கமும் இதனை உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ளது.

# இலங்கை விடயத்தில் அடக்கி வாசிக்கும் ஐநா மனித உரிமைகள் பேரவை

**- சிவா பரமேஸ்வரன்**

“இலங்கையில் நிலவும் மனித உரிமைகள்” குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை பாதிக்கப்பட்டவர்களின் நலனை மையப்படுத்தி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை, தாங்கள் கைவிடப்பட்டுள்ளோம் என போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் கருதுகின்றனர்.

செப்டம்பர் 11 ஆம் திகதியான நாளை தினம் (திங்கள்கிழமை) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில், அதன் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளில் பெரும்பாலானவை பழைய விடயங்களே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அவை தமிழர்களின் கவலைகள் மற்றும் தேவைகளுக்கான தீர்வு எதையும் முன்வைக்கவில்லை எனவும் தமிழர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது எரிந்துகொண்டிருக்கும் பிரச்சனைகளான விகாரைகளின் கட்டுமானம், வளமான நிலங்களை தொடர்ந்து கையகப்படுத்தும் நடவடிக்கைகள், தமிழர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து நசுக்கப்படுவது போன்ற அம்சங்கள் இந்த அறிக்கையில் மிகக்குறைந்த அளவிலேயே பேசப்பட்டுள்ளன எனக் கூறும் அவர்கள், போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் குறித்து அந்த அறிக்கையில் ஒரு வார்த்தை கூட இல்லை எனக் கூறுகின்றனர்.

தமிழர்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, ஐ நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அந்த அறிக்கை “மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் அந்த மீறல்கள் மீண்டும் இடம்பெறாது என்ற உத்தரவாதத்திற்காக காத்திருக்கிறார்கள்” எனக் கூறினாலும், அவர்கள் தரப்பு கருத்தை பிரதிபலிக்காமல், அரசின் கூற்றை அங்கீகரிப்பது போலுள்ளது.

ஆட்சிமுறை சீர்திருத்தங்கள், இணைக்கப்பாடு மற்றும் முன்னெடுப்பிலுள்ள சவால்களின் மூலம் இருக்கும் வாய்ப்புகள் பற்றி பேசும் அவரது அறிக்கை, அவற்றுடன் அர்த்தமுள்ள மற்றும் சுயாதீனாமான பொறுப்புகூறல் செயல்பாடுகள் இருக்க வேண்டும் எனக் கூறினாலும், அப்படியான பொறுப்புக்கூறல் வழிமுறைகள் ஏதும் நடைமுறைபடுத்தப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் உண்மையை கண்டறியும் உள்ளக விசாரணை பொறிமுறைகளை தொடர்ச்சியாக நிராகரித்துள்ளனர். ஆனல், ஐ நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையோ அவர்களின் விருப்பதற்கு எதிராக அதை நோக்கி தமிழர்களை தள்ளுவது போலுள்ளது.

தமிழ் தாய்மார்களால் தலைமையேற்று நடத்தப்படும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம், சர்வதேச நீதியே தமக்கு வேண்டும் என மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமான ஓகஸ்ட் 30 அன்று வெளியிட்ட அறிக்கையில் அவர்கள் இதை மீண்டும் தெரிவித்துள்ளனர். “நங்கள் உள்ளூர் வழிமுறைகளில் நம்பிக்கை இழந்துவிட்டோம், அதன் காரணமாகவே வடக்கு கிழக்கில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக அமைதியான முறையில் போராடி வருகிறோம். சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்”.

இதேவேளை அந்த அறிக்கை நாட்டின் தெற்கில் நடைபெறும் ஒடுக்குமுறையை பற்றி பேசுகிறது, ஆனால் பல தசாப்தங்களாக வடக்கு கிழக்கில் அது நடைபெறுவது பற்றி மௌனம் காக்கிறது.

ஐ நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சிறுபான்மையினர் மீது மாத்திரமின்றி பொதுவாக அனைவர் மீதும் இந்த ஒடுக்குமுறை காணப்படுகிறது எனக் கூறுவது போலுள்ளது. “இந்த இராணுவத்தினரும் பொலிஸூம் எம்மை சுற்றி தொடர்ந்து நிலைகொண்டிருப்பதும், நம்மை அச்சுறுத்தும் செயல்பாடானதும் எமக்கு மரண பயத்தையும் நம்முடன் இருக்கும் நம் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாகவும் கவலைகொள்ள வைத்துள்ளது. இந்த பயம் நம்மை தினந்தோறும் ஆட்டிப்படைக்கிறது” என வலிந்து காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவினர்களின் சங்கம் தனது அண்மைய அறிக்கையில் தெரிவித்துள்ளது. அண்மையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே பொறுப்புக்கூறல் தொடர்பாக நடைபெற்ற கூட்டம் தோல்வியடைந்தது என ஜனாதிபதியே தெரிவித்துள்ள நிலையில், இலங்கை ஜனாதிபதியை நல்லிணக்கத்தை முன்னெத்துச் செல்வதில் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறார் என ஐ நா மனித உரிமைகள் ஆணைக்குழு பாராட்டியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி இணைக்கப்பாட்டை முன்னெடுப்பது தொடர்பில் உண்மையை கண்டறியும் பொறிமுறையை ஏற்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் இருக்கிறார் என ஐ நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை கூறுகிறது.

“அரச தகவல்களுக்கு அமைய ஜூலை மாதத்தில், அரச அமைப்புகள், சிவில் சமூகம், தொழிற்சங்கங்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் உட்பட பல தரப்புடன் கலந்துரையாடல் செய்யப்பட்டுள்ளது” எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும், இந்த கலந்துரையாடல் பரந்துபட்டளவில் இடம்பெறவில்லை என்பதையும் அந்த அறிக்கை ஏற்றுக்கொள்கிறது.

“எனினும், இந்த கலந்துரையாடல்கள் இதுவரை விரிவாக இருக்கவில்லை, மற்றும் பாதிக்கபப்ட்டவர்கள், அவர்களது சங்கங்கள், மனித உரிமை பாதுகாவலர்கள், மற்றும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலைமாறுகால நீதி பொறிமுறை நிபுணர்கள் இதில் உள்வாங்கப்படவில்லை”.

எனினும், இந்த முழு பொறிமுறையில் முக்கிய பங்குதாரரான பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் நேரடியாக கலந்துரையாடல் இடம்பெறவில்லை மற்றும் இந்த பொறிமுறை திட்டமிடப்படும் போது அவர்களது கருத்துக்கள் ஒருபோதும் பரிசீலிக்கப்படவில்லை.

ஐ நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை இந்த கலந்துரையாடல் வழிமுறை தொடர்பில் தனது கவலையை வெளிப்படுத்தியிருந்தாலும், அது அப்படியான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட வேண்டும் என காத்திரமான பரிந்துரை ஏதும் அதில் இல்லை. சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் சிறந்த நலன் தொடர்பில் உத்தேச, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மதிப்பீடு செய்ய வேண்டும் எனவும் உதட்டளவில் வலியுறுத்தியுள்ளது.

அது மாத்திரமின்றி, உண்மையை கண்டறியும் வழிமுறையானது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களால் நம்பும்படி இருக்க வேண்டுமென கூறும் அந்த அறிக்கை, அது நேர்மையான கலந்துரையாடல்களிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறுகிறது. மேலும் அதை நடைமுறைபடுத்த அரசியல் திடசங்கற்பம் வேண்டும் என அந்த அறிக்கை கூறுகிறது.

“பாதிக்கபப்ட்டவர்கள் பழிவாங்கப்படும் அச்சமின்றி, தமது செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு சுதந்திமாக இருப்பது மாத்திரமின்றி, அவர்கள் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதை செயற்படுத்தும் சூழ்நிலையிலும் இது நடைபெற வேண்டும்”.

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நடைமுறையில் இருப்பதால், பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் பழிவாங்கப்படுவார்கள் என அஞ்சுகிறார்கள் மற்றும் மக்கள் தங்கள் உரிமைகளைக் கோரியும் ஈர்க்கும் போராட்டங்களை நடத்தியதற்காகவும், அற்பமான குற்றச்சாட்டுகளின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுகிறார்கள்.

அதுமாத்திரமின்றி இன்னும் இராணுவம் மற்றும் பொலிஸ் பிடியிலிருக்கும் நிலங்களில் எந்தளவிற்கு விடுவிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பிலான விபரங்களில், கடந்த அறிக்கைக்கும் தற்போதைய அறிக்கைக்கும் இடையே முரண்பாடுகள் இருந்தாலும், அது குறித்து அரசிடம் அந்த அறிக்கை கேள்வி ஏதும் எழுப்பவில்லை.

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கடந்த புதன்கிழமை (6) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இலங்கையில் இன்னும் பொறுப்புக்கூறல் விடயத்தில் நம்பிக்கையின்மை உள்ளதாக கூறியுள்ளார்.

“இலங்கையில் பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்து நம்பிக்கையின்மை நிலவுகிறது - அது போர்க் குற்ற அராஜகங்களாக இருக்கலாம், அண்மைய மனித உரிமை மீறல்கள், ஊழல், அல்லது அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் நம்பிக்கையின்மை நிலவுகிறது, நாடு முன்னேற வேண்டுமாயின் அந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்”.

எனினும், ஐ நா மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில், அதன் ஆணையாளர் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல் செய்து நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தாலும், தனது அதிருப்தியை வெளிப்படுத்தவோ அல்லது அது நடைபெறவில்லை என்றால், தண்டனை நடவடிக்கைகள் எடுப்பது பற்றி எந்த உத்தேச கருத்தையும் முன்வைக்கவில்லை.

## கடந்தவையும் கடப்பவையும் - (71)

**‘நீறு பூத்த சாம்பலில் இருந்து - புது**
**வீறு கொண்டெழும் பீனிக்ஸ் பறவை’ - இது**

**எகிப்திய புராணக் கதைகளின் குறியீட்டுப் பறவையாம் - வலிமையுடன்**
**மீளப்பிறக்கும் எதற்கும் இது உவமையாம் - அதுபோல**

**நீறாகிப்போன நூல்களின் சாம்பலைத் தன்மடியில்**
**தாங்கிய நூல் நிலையம் மறுபடியும்**

**காலத்துக்கு ஏற்றாற்போல் கன மாற்றத்தோடு - புது**
**கோலங்கொண்டு நிற்பதனை மறுபடியும் திரும்பிப்பார்த்துவிட்டு**

**புகுருகின்றோம் பூங்காவிற்குள்**

**பத்து வயதில் கூட்டி வந்தார்**
**மெத்தப் பெரும் ஆர்வமாக - பக்கத்து**

**திறந்தவெளி அரங்கினிலே ‘சர்க்கஸ்’ பார்க்கவென - எமை**
**மறந்து விளையாடியதும் புதிதாகப் போட்ட நீளக்காற்சட்டை**

**தூசியைத் தட்டிவிட்டு வரமாட்டோம் என**
**அடம்பிடித்த பிள்ளைகளை மிருகங்கள் பார்ப்போம் என**

**விரைவு படுத்தியதும் நேற்றுப்போல் நினைவுக்கு வந்தது**
**ஒருமுறையே போன அந்தப் பூங்காவைப் பார்த்தபோது,**

**நெருக்கமான வண்ண மலர்கள் கொண்ட**
**அடர்த்தியான சோலை - அங்கு**

**செழிப்பாக வளர்ந்து நிற்கும் நாகலிங்கப் பூமரமும்**
**புதுப்புதுப் பூக்களைத் தாங்கி நின்று மணம்பரப்ப**

**கண்கவர் வண்ணத்தில் சறுக்கிகளும் அவற்றோடு பலவும்**
**சின்னவர்களை கவரும் வகையினில் அமைந்திருக்க**

**மரங்களின் நடுவினிலே தடாகம்போல் அலங்கார நீரூற்று - அதிலொன்றில்**
**கரங்களில் யாழொடு வெண்ணிறத் துகிலிலே**

**நின்றபடி அழகிய பெண்ணின் சிலை - பூங்காவை**
**நன்றாகக் கவனிக்க ஆக்களும் தான் நிற்கிறார்கள்**

**ஐம்பதுகளில் யாழ்ப்பாணம் நகரசபையால்**
**எங்களுக்கு என்று ஒரு பூங்கா உருவெடுக்க - அன்றைய**

**வைத்தியர் சுப்பிரமணியம் என்பவர் - அதற்கு**
**மெத்தப்பெரும் பணம் கொடுத்து ஊக்குவிக்க**

**அவர்பெயரில் அமைந்ததுவாம் பூங்கா இது - பின்**
**எதுவுமே இல்லாது அழிந்ததுவாம் போராட்ட காலத்தில்**

**இரண்டாயிரத்து நாலில் யுனிசெவ் வழங்கிய தொகையில்**
**திரும்பவும் புதுப்பிக்கப் பட்டதுவாம்**

**அழகிய தடாகமாக விளங்கும் அலங்கார நீரூற்றும் - தனியார்**
**நிறுவனம் ஒன்றின் ஆதரவில் வந்ததென**

**நின்றவர்கள் சொல்லி நிறக்க - அந்தவேளை**
**அங்கன்று வந்தவர்கள் இருவர்தான் - வந்தவர்கள்**

**இளையவர்கள் மிகுந்த பசிபோலும் அவர்களுக்கு - அவசரமாய்**
**இளையைக் கழற்றி இருவருமாய் உண்ணுகிறார்கள்**

**தூர இடத்துப் பயணமோ அன்றி - அலுவலகங்களில்**
**கனநேரம் காத்திருந்து களைத்தாரோ**

**சிறுவர் பூங்கா எனினும் பெரியவர்க்கும் பலவழியில்**
**பயனடையும் வண்ணமாக உள்ளதென அங்கிளிடம் சொல்ல**

**அந்தக்காலம் நாங்களும் பயனடைந்தோம் என**
**சொந்தக்கதை எதையோ சொல்ல வந்தார் - ‘அன்றும்**

**தனியார் கல்வி நிலையங்களை நாடி வந்தவர்கள்**
**துணிவாக நின்று படங்களும் எடுத்தோம்’ என்றார்**

**போராட்ட காலத்து எங்களுக்கு போகமுடியாது**
**போடப்பட்டு இருந்தன பல தடைகள் - இன்று**

**அங்கு போராட்டம் நடந்ததற்கும் கடும் சமரில்**
**எங்கும் கட்டடங்கள் எரிந்ததற்கும் சான்றே இல்லை - மிக**

**அதிசயமாய் இருந்தது அந்தப் பாதையிலே**
**திசை தோறும் கண்ட காட்சி .....** **( தொடரும்)**

**-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --**

# மொன்றியால் மாநகரில் அரங்கப்பிரவேசம் கண்ட பரதச் செல்வி சிவகாமி சண்முகலிங்கம்

***"எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் - பண் நான்கும்
பண் நின்ற கூத்துப் பனினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் பூம்புகார்ப் பொன்தொடி மாதவி தன்
வாக்கினால் ஆடு அரங்கின் வந்து"***

என்று நம்மவர்களின் ஆடல் கலை பயின்று வரும் மாணவச் செல்விகளின் அரங்கப் பிரவேசம் பற்றி புகழ்ந்து எழுதவும் பாராட்டவும் தான் வேண்டும். அவ்வாறான பாராட்டுக்களைப் பெறுவதற்கு அவர்கள் எத்துனை கடினமான பயிற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதை கடந்த செப்டம்பர் மாதம் 9ம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மொன்றியால் மாநகரின் கொன்கோடியா பல்கலைக் கழகத்தின் "ஓஸ்கார் அரங்கில் நாம் கண்டோம். அந்த நாளில் பரத நர்த்தனாலயா" அதிபர் "நாட்டியக் கலைமணி" திருமதி. மாலினி சுரேஸ்வரனின் மாணவிகளுள் ஒருவரான மொன்றியால் வர்த்தக அன்பர் சண்முகலிங்கம் (புரூட்ஸ் ஹபி) தம்பதியினரின் செல்வமகள் குமாரி சிவகாமியின் பரத அரங்கேற்றத்தின் முழுமையான காட்சிகள் எடுத்தியம்பின.

ஒரு காலத்தில் தென்னிந்தியாவில் ஒரு குறிப்பிட்ட சமூகம் சார்ந்தவர்களால் ஆடப்பெற்றும் வளர்க்கப்பெற்றும் வந்த இந்த கலையையும் அதில் ஈடுபட்ட கலைஞர்களையும் இழிவாகப் பேசிய நிலையிலிருந்து மீட்டெடுத்து உயர்ந்த நிலைக்கு எடுத்துச் சென்றவர்களான அம்மையார் பாலசரஸ்வதி அம்மையார் ருக்மணி ஆகிய இருவரையும் இந்த நேரத்தில் நாம் போற்றி வணங்குவோம்.

பரதத்தை தெய்வீகக் கலை என்ற தரத்திற்கு உயர்த்தியவர்கள் இந்த இருவரே ஆவார்கள்.

அரங்கேற்றச் செல்வி சிவகாமியின் அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக தாயகத்திலிருந்து வருகை தந்த திலக நர்த்தனாலயத்தின் அதிபர் "கலாபூசணம்" திருமதி. யசோதரா விவேகாந்தன் செல்வியை வாழ்த்திப் பேசும் போது "ஆன்மீக உணர்வையும் ஆத்ம சுகத்தையும் தரவல்ல இக்கலையானது தெய்வீகத்தன்மை வாய்ந்தது என்றும் வேற்று இனங்கள் சார்ந்த கலைகளும் கலாச்சார விழுமியங்களும் மலிந்துள்ள புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழரின் பண்பாட்டுக் கோலங்கள் மற்றும் விழுமியங்களை பேணிக் காக்கும் பணியை இவ்வாறன அரங்கேற்றங்களும் அதற்கு துணைநிற்கும் இசை வடிவங்களும் ஆசிரியப் பெருந்தகைகளும் நிச்சயம் உயிர்ப்புடன் விளங்குகின்றார்கள் என்றே கூறவேண்டும்" என்று வாழ்த்திச் சென்றார்.

நடனப் பயிற்சி என்பது யோகக் கலைக்கு சமமானது. மனதை ஒரு நிலைப்படுத்த எடுத்துக் கொண்ட விடயத்தைப் பரிபூரணமாக கற்றுக் கொள்வது சிறந்த பயிற்சியாகும். இவ்விதமான கனமான பயிற்சிகள் கல்வியில் மாணவர்கள் மேன்மை பெறுவதற்கும் சிறந்த வழியாகும்.

மேலும் மொன்றியால் அருள் மிகு திருமுருகன் ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் ஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் அவர்களின் ஆசியுரையும் இடம்பெற்றது.

ரொறன்ரோவிலிருந்து இந்தோ சிலோன் நடனப் பள்ளியின் அதிபர் திருமதி. பத்மினி அன்றைய அரங்கேற்றத்திற்கு வாழத்துரை வழங்க அழைக்கப்பெற்றிருந்தார். அவர்கள் தனது உரையில் "மாரி சிவகாமியின் அரங்கேற்றத்தில் புஸபாஞ்சலி - அலாரிப்பு - ஜதீஸ்வரம். கவுத்துவம் - பதவர்ணம் - பதம் - ஆகிய உருப்படிகளுடன் தொடர்ந்து தில்லாவுடன் நிறைவு பெற்றது.

அரங்கேற்றச் செல்வி சிவகாமி அவர்கள் தொடர்ந்து பரதக் கலையில் உள்ள உயர்ந்த அம்சங்களையும் கற்று கலை உலகிலும் வாழ்விலும் சிகரங்களைத் தொடுவதற்கு நடந்து முடிந்த அவரது அரங்கேற்றம் ஒரு வடிகாலாய் அமையும் என்று வாழ்த்துக் கூறி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமிழ் வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகின்றேன்.

**வீணை மைந்தன், மொன்றியால் - கனடா**




ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்-ரொறன்ரோ
SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch)

விநாயகர் சதுர்த்தி விரத உற்சவம்
18.09.2023 திங்கட்கிழமை

விநாயகர் சதுர்த்தி சதுர்த்தி தினத்தைமுன்னிட்டு காலையும், மாலையும் உபயகாரர்கள், அடியார்களின் பிரார்த்தனைகள் யாவும் நிறைவேற பாற்குட அபிஷேகங்கள், சங்காபிஷேகங்கள், விஷேட பூஜைகள் நடைபெறும். காலை உற்சவத்தில் விநாயகப்பெருமான் வீதிவலம் வரும் அருட்காட்சியும், மாலை உற்சவத்தில் விநாயகப்பெருமான் அழகிய இந்திரரதத்தில் வீதிவலம்வந்து அடியார்களுக்கு அருள்புரியும் காட்சியும் நடைபெறும்.

காலை
6:00 மணிக்கு காலைப்பூஜை.
6:30 மணிக்கு கும்பபூஜை, 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தர கலச சங்காபிஷேகம்
7:30 மணிக்கு பால்குட அபிஷேக அடியார்களுக்குரிய சங்கற்பம்.
10:00 மணிக்கு விஷேடபூஜை, தொடர்ந்து வசந்தமண்டபபூஜை, விநாயகப் பெருமான் வீதியுலா.

மாலை
3:00 மணிக்கு கும்பபூஜை, 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தர கலச சங்காபிஷேகம்
4:00 மணிக்கு பால்குட அபிஷேக அடியார்களுக்குரிய சங்கற்பம்.
6:00 மணிக்கு விஷேட சாயரட்சைப் பூஜை.
7:00 மணிக்கு வசந்தமண்டபபூஜை, அழகிய இந்திரரதத்தில் வீதிவலம்.

ஆவணிச் சதுர்த்தி தினத்தில் காலை, மாலை பால்குட அபிஷேகம், விஷேடதிரவிய அபிஷேகம், மோதக பூஜை செய்துகொள்ள விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

416.291.8500 | www.vinaayagar.com | /vinaayagar

# இங்கிலாந்தில் நடனச் செல்வி இஷானியின் அரங்கேற்றச் சிறப்பு கண்டு மகிழ்ந்த சபையோர்



என்னுடைய ஆயுளில் பல அரங்கேற்ற நிகழ்வுகளை கண்டு களித்திருக்கிறேன். இம்முறை கடந்த செப்டெம்பர் திங்கள் 2ம் நாள், லண்டன் மாநகர் (பெரிய பிரித்தானியா) எல்லைக்குள் பிரசித்தி பெற்ற லண்டன் Waters Meet நாடகக் கலையரங்கில் நடந்தேறிய குமாரி. இஷானி கிரிஷான் (Miss. Ishani Krishan) அவர்களின் நடன அரங்கேற்ற நிகழ்வுகள் என்னை மீண்டும் பூம்புகார் செல்வி மாதவி பொற்கொடியாளின் அரங்கேற்றக் கலை வடிவங்களை, இளங்கோ அடிகள் வர்ணித்த அரங்கேற்ற காதையை நினைவூட்டியது போல் மெய் சிலிர்த்து இரசித்தேன்.

"..தாது அவிழ் புரிகுழல் மாதவி" - தன்னை ஆடலும் பாடலும் அழகு என்று, இக்கூறிய மூன்றில் ஒன்று குறை படாமல் என்று, இளங்கோவடிகள் வர்ணித்தது போன்று குமாரி இஷானியின் அபினய முத்திரைகளும், பாவங்களும், விழிகள் பேசிய செய்திகளும் என்னை அப்படியே கட்டிப்போட்டன.

குமாரி. இஷானியின் தாயார் திருமதி. அபிராமி கிரிஷான், பாரிஸ் நகரில் புகழுடைத்த "பரத சூடாமணி" திருமதி. கொசலா ஆனந்தராஜின் தலையாய மாணவியாவார். "பரத கலா வித்தகர்" அபிராமியின் தவச்செல்வியான இஷானியும் வாழை யடி வாழையென வந்துதித்த கலைச்செல்வி ஆவார்.

காங்கேசன்துறையூர் பெரியவர் அமரர். இ. குருசாமி அவர்களின் குடும்பத்தில் கலை மணம் பரப்பும் வம்சமென வழி வழி வந்த நான்காவது தலைமுறை, கலை வாரிசு, குமாரி இஷானியின் தாயார் திருமதி. அபிராமியே இவரது குருவுமாவார். தாயைப் போல பிள்ளை நூலைப் பே ால சேலை எனும் பெரியோர் வாக்கிற்கமைய மாணவப் பருவத்திலேயே பல்வேறு நடன நிகழ்வுகளை வெவ்வேறு அரங்குகளில் காட்சிப்படுத்திய நடன இளவரசி குமார். இஷானி மென்மேலும் பரதக் கலையின் அற்புதங்களை வெளிக்கொணர்வார் என நம்பிக்கை தருகிறார்.

அரங்கேற்ற நிகழ்வில், முதலில் புஷ்பாஞ்சலியை தொடர்ந்து வர்ணம் - சப்தம் - ஜதீஸ்வரம் - கணேஷ நிருத்தியாஞ்சலி - கீர்த்தனம் - பதம் - கண்ணன் பாடல், (திருமதி. கௌசலா அவர்கள் தயாரிப்பில்) தில்லானா என அனைத்து சங்கதிகளும் அரங்கேற்ற மாணவி செய்தது போலல்லாமல் மிகவும் அனுபவம் - தேர்ச்சி பெற்ற கலைஞராக தன்னுடைய திறமைகளை அரங்கில் காட்சிப்படுத்திய குமாரி இஷானியை சபையோர் அனைவரும் உளமாரப் பாராட்டினார்கள்.



தாயாரும் குருவுமான திருமதி. அபிராமியின் நட்டுவாங்கம் மிக மிக அற்புதம். கணீரென்ற குரலில் அட்சர சுத்தம் புல்லரிக்க வைத்தது. பக்க வாத்தியக் கலைஞர்களின் பங்களிப்பு அபாரம். நடன அசைவுகளுக்கு உயிர் கொடுத்த வாத்தியக் கலைஞர்களுக்கு ஆடல் அரசன் தில்லைக்கூத்தன் அருள் பெருகட்டும்!

தண்ணுமை வாத்தியம் (மிருதங்கம்) ஸ்ரீ எம். பாலசந்தர், வாய்ப்பாட்டு உடுப்பி எஸ். ஸ்ரீ நாத், வயலினிசை ஸ்ரீ ஏகலாதரன், புல்லாங்குழல் ஸ்ரீ பா. ஞானவரதன், மோர்சிங் ஸ்ரீ சிதம்பரநாதன் ஆகியோரின் வாத்திய இசைக் கலவைகளுடன் குமாரி இஷானியைப் போன்றுதான் சிலப்பதிகாரச் செல்வி மாதவியும் அன்று ஆடியிருப்பாளோ என என் மனத்திரையில் காட்சி விரிகிறது. வாழிய எங்கள் கலைச்செல்வி இஷானி.







ஆடல் அரங்க நிகழ்ச்சிகள் அனைத்தையும் அழகு தமிழிலும், ஆங்கில மொழியிலும் இரசிக்கத்தக்க விதத்தில் தொகுத்து வழங்கிய கலைஞர் திருமதி. ஆனந்தராணி பாலேந்திராவின் குரல் வளம் செவிகளில் தேன் பாய்ச்சுகிறது!

தொடரட்டும் குமாரி இஷானியின் கலைபணி!
வளரட்டும் பரதக் கலை வடிவங்கள்!

**- வீணை மைந்தன், கனடா**


றொறன்ரோ

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி



**4 வயது (Junior Kindergarten) முதல் 14 வயது (8 ம் வகுப்பு) வரையிலான மாணவர்களுக்கான**

# தமிழ், சமய, பண்ணிசை

## வகுப்புக்கள் 10.09.2023 ஆரம்பம்

**எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த 18 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது.**

**புதிய மாணவர்களுக்கான பதிவு www.varasiththi.com இணையத்தளத்தில் விண்ணப்பிக்கலாம்.**




வகுப்புக்கள் நடைபெறும் நேரம்
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை




**Sri Varasiththti Vinaayagar Hindu College**
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500

# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President, Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto (Part 18)

*(Continued from last week)*

There is old established precedent in the Supreme Court of Ceylon that an action lies at the suit of an officer in the civil administration for unpaid salary earned during the period of his appointment. In the case of Jansz v. Tranchell [2 2 (1865) Ram. 160.] this was treated by the Supreme Court as " taken for granted " law and conceded by The Queen's Advocate. The court did not find it necessary to cite any previous authority or to express any view as to the origin of the right of action, but there may have been many unreported instances of this practice known to the judges. The actual point argued was whether such arrears of salary constituted a debt which could be attached by a creditor, but the existence of a debt recoverable by suit by the civil servant against the Crown was an essential step in the reasoning. In 1868 a similar point came before the Supreme Court of Ceylon in Fraser's Case [3 3 (1868) Ram. 316]. This was a claim for arrears of salary by a civil servant who held concurrent offices under the Imperial Government and the Government of Ceylon. It was held that as respects salary due in respect of his office under the Government of Ceylon prior to his dismissal, this was a debt due to him from the Crown in Ceylon for which he was entitled to bring an action against The Queen's Advocate, though he failed on the facts as nothing was due to him. The Court in this case ascribed the origin of his right of action to Roman-Dutch law and cited the Proclamation of 1799.

Here then is authority dating back more than a hundred years that, under the common law of Ceylon, an action does lie at the suit of a civil servant for remuneration agreed to be paid to him by the terms of his appointment and remaining unpaid.

The Supreme Court in its judgment in the present appeal appears to have regarded these authorities as over-ruled by the decision of the Judicial Committee of the Privy Council in Siman Appu v. The Queen's Advocate [4 4 9 A. C. 571.]. In their Lordships' opinion this is not so. Siman Appu's Case was concerned with the general question whether a subject had any right of suit against the Crown in Ceylon for breach of contract. The contract sued upon was not one of service and Fraser's Case was cited only on the point as to whether an action lay against the Crown on a contract. The Judicial Committee upon the material then before them were unable to conclude with any certainty that a right of suit in contract against the Government of the United Provinces had formerly existed under Roman-Dutch law, but they nevertheless held that whatever may be the exact origin of the practice of suing the Crown in contract it was then (i.e. by 1884) incorporated into the law of Ceylon.

IN the present appeal their Lordships have had their attention drawn to a passage dealing with this topic in the third book of De Jure Belli ac Pads by Grotius-

" According to civil law also a person can be said to be bound by his own act, either in this sense, that an obligation results not from the law of nature alone but from the municipal law, or from both together, or in the sense that the obligation gives a right to action in a court of law. Therefore we say that a true and proper obligation arises from a promise and contract of a king, which he has entered into with his subjects, and that this obligation confers a right upon his subjects ; such is the nature of promises and contracts as we have shown above ; and this holds even between God and man.

Now if the acts are such as may be done by a king, but also by any one else, municipal law will be binding in his case also ; but if they are the acts of the king as king, municipal law does not apply to him. This distinction has not been observed with sufficient care by Vazquez. Nevertheless, from both these acts a legal action may arise, at least so far that the right of the creditor may be declared; but compulsion cannot follow on account of the position of the parties with whom the business is conducted. For it is not permissible for subjects to compel the one to whom they are subject; equals, however, by the law of nature, have this right against equals, and superiors against inferiors even by municipal law."

The words italicised strongly support the view that there existed in the United Provinces as early as the seventeenth century a right to bring a declaratory action against the government in respect of a contract entered into with the government, although execution could not be obtained upon the judgment. This bears a strong resemblance to the practice in Ceylon described by Cayley C. J. in Jayawardena v. Fernando [1 1 (1881) Supreme Court Circular p. 77.] and it may well be that had this passage from Grotius been drawn to the attention of the Board in Appu's Case they would have ascribed the then current practice in Ceylon to a Roman-Dutch origin.

The significance of Appu's Case is that it recognises the development of an indigenous common law of Ceylon by the decisions of the courts of that country even though the origin of a particular proposition of law cannot be traced back to the Roman-Dutch law of the United Provinces in the eighteenth century. The judgment upholds those parts of the judgments in Jansz's Case and Fraser's Case which recognised that the subject could bring an action in contract against the Crown in Ceylon although it does not ascribe this, as the Court in Fraser's Case had done, to the Roman-Dutch law in force in Ceylon under the Government of the United Provinces. It was not concerned with and casts no doubt on the correctness of those parts of the judgments in Jansz's Case and Fraser's Case which held that unpaid salary due to a civil servant for services rendered during his period of service constituted a debt for which he was entitled to sue the Crown.

Consistently with the attitude adopted by the Board in Siman Appu's Case to old established precedent in decisions of the courts of Ceylon it would in their Lordships' view be wrong after this lapse of time to depart from the principle laid down in Jansz's Case and Fraser's Case that a civil servant in Ceylon is entitled to sue the Attorney-General on behalf of the Crown for arrears of salary.

In coming to the contrary conclusion in the instant appeal, the Supreme Court of Ceylon relied upon the decision of the Privy Council in the Indian Case of High Commissioner for India v. Lall [11 (1948) A. I. R. (P. C.) 121]. In India, unlike Ceylon, the source of the common law is English common law ; but on the assumption, which their Lordships think erroneous, that Fraser's Case had been over-ruled by Appu's Case the Supreme Court concluded that any right of the appellant to sue for arrears of salary fell to be determined by that branch of English law relating to the sovereign attributes or prerogative of the Crown which must have been introduced into Ceylon as a necessary consequence of the transfer to the Crown of sovereignty over the island. If this ascription of the origin of the appellant's right of suit to English public law were right Lall's Case would have been very much in point and in view of the importance attached to it in the judgment of the Supreme Court and the full argument which has been addressed to them upon it, it is appropriate that their Lordships should deal briefly with it.

As has already been pointed out the current of authority for a hundred years before 1926, though sparse, was to the effect that arrears of salary of a civil servant of the Crown, as distinguished from a member of the armed services, constituted a debt recoverable by Petition of Right. These authorities, including the decision of the House of Lords in Sutton v. A. G.[2 2 (1923) 39 T. L. B. 294.], are conveniently summarised in a penetrating article by Sir Douglas Logan on "The Civil Servant and his Pay" (1945) 61 L.Q.R. 260 in which he commented on the decision in Lucas v. Lucas (1943 P. 68), where Pilcher J., adopting the reasoning of Lord Blackburn in the Scots case of Mulvenna v. Admiralty (1926 S.C. 842), reached a contrary conclusion.

Unfortunately, none of these earlier authorities was drawn to the attention of the Board in Lall's Case. Most of the argument and of the judgment in that case dealt with the question whether the dismissal of the civil servant was void under the relevant statutory provisions relating to his service, but the Board did decide that, notwithstanding that his purported dismissal was void, he had no right of action for arrears of pay. Lall's Case can be distinguished from the instant case in that the terms on which Mr. Lall was engaged contained no express provision as to the pay he was to receive for his services. But the Board did not base their decision exclusively on this. They too adopted as a correct statement of the law the judgment of Lord Blackburn in Mulvenna v. The Admiralty (ubi sup).

(To be continued)



# மலேசிய இந்து சங்கத்தின் மகுட விழா: 46–ஆவது தேசிய திருமுறை விழா

## சிவநெறிச் செல்வர்' தங்க கணேசன் அறிவிப்பு

மலேசிய மடல்


நக்கீரன்

**பெ**ட்டாலிங் ஜெயா, செப்.14:




மலேசியாவில் வாழ்கின்ற 19 இலட்சத்து 70 ஆயிரம் இந்து மக்களின் தாய் அமைப்பான மலேசிய இந்து சங்கம் கொண்டாடும் சமய விழாக்களில் தலையாய விழாவான திருமுறை விழா, நாடு முழுவதும் நடைபெற்று, அதன் நிறைவுக் கட்டமாக தேசியத் திருமுறை விழாவை எட்டியுள்ளது என்று அதன் தேசியத் தலைவர் "சிவநெறிச் செல்வர்" தங்க கணேசன் அறிவித்துள்ளார்.



இவ்வாண்டு கொண்டாடப்படும் 45-ஆவது தேசியத் திருமுறை விழா மலேசிய தேசிய தினமான செப்டம்பர் 16-ஆம் நாள், முழுநாள் நிகழ்வாக சிரம்பான், பண்டார்ஸ்ரீ செண்டாயான், "மெட்ரிக்ஸ்" பன்னாட்டு பள்ளி வளாகத்தில் காலை 7:00 முதல் மாலை 6:00 மணிவரை நடைபெற உள்ளது.

அண்மைக் காலமாக 120 வட்டாரப் பேரவைகளின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் நடைபெற்ற திருமுறைப் போட்டிகளை அடுத்து, 14 மாநிலப் பேரவைகளின் திருமுறை விழாக்களும் நடைபெற்று, சிவநெறிய சிந்தனை இந்துக்களின் மனதை ஆட்கொண்ட நிலையில் தற்பொழுது தேசியத் திருமுறை விழா நடைபெறுகிறது என்று "சங்கபூசன்" தங்க கணேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 58 ஆண்டுகளாக இந்து சமய காவல் அமைப்பாக மலேசியாவில் விளங்கும்





இந்து சங்கம், திருமுறை விழாக்களின்மூலம், இலட்சக் கணக்கான மக்களின் மனப் பாத்திகளில் சிவநெறியப் பயிரையும் தமிழையும் ஒருசேர வளர்த்து வருகிறது என்பதை இந்து சங்கம் பெருமையுடன் பறைசாற்றிக் கொள்கிறது.

திருமுறை ஓதும் போட்டி, பேச்சுப் போட்டி, பெரிய புராணம் ஓதுதல் உள்ளிட்ட போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்கள், பெரியவர்கள், திருமுறை நடுவர்கள், குடும்ப உறுப்பினர்கள், விழா ஏற்பாட்டாளர்கள், இந்து சங்க தேசிய-மாநில-வட்டாரப் பொறுப்பாளர்கள், இந்து சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என நாடு முழுவதிலும் இருந்து ஆயிரத்து ஐந்நூறு பேர் பாரம்பரிய உடையில் சிரம்பான் மாநகரை நோக்கி படையெடுக்கும் இந்த 45-ஆவது தேசியத் திருமுறை விழா, சிற்றுண்டி உபசரிப்புடன் காலை ஏழு அளவில் தொடங்க இருக்கிறது.

தொடர்ந்து, சிவாச்சாரியார் டாக்டர் ஆனந்த் கோபி தலைமையில் நடைபெற இருக்கும் சிறப்பு பூசனை, கொடியேற்றம், நடராஜர் - அன்னை சிவகாமி சமேதர், மற்றும் நால்வர் பெருமக்களின் ஊர்வலம், இறைவணக்கம், இந்து சங்க எழுச்சிப் பாடல், இந்து சங்க தேசிய செயலர் கே. மாணிக்கவாசகத்தின் வரவேற்புரை, இந்து சங்க துணைத் தலைவர் கணேஷ் பாபுவின் சிறப்புரை, மஇகா தேசிய துணைத் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் மு. சரவணனின் சிறப்புரைக்குப் பின் ஒன்பது மணி அளவில் திருமுறைப் போட்டிகள் தொடங்க இருக்கின்றன.

மதிய உணவுக்குப்பின், தங்கப் பதக்கப்போட்டி, சிறப்புத் தலைவர்கள் வருகை, இந்து சங்க தேசியத் தலைவர் உரை, மஇகா இந்நாள் - முன்னாள் தலைவர்களான டான்ஸ்ரீ எஸ்.ஏ. விக்னேஸ்வரன், டான்ஸ்ரீ டாக்டர் ச. சுப்பிரமணியம் ஆகியோரின் சிறப்புரை, தேவார நாயகப் பதக்கம மற்றும் ஆறு தங்கப் பதக்கங்களுக்கான வெற்றியாளர்கள் அறிவிப்பு, தொடர்ந்து நன்றியுரையுடன் மாலை 6:00 மணியுடன் இந்த விழா நிறைவுபெறும் என்று இதன் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள தங்க. கணேசன், இந்த நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பு சேர்க்க பரிசளிப்பு நிகழ்ச்சியிந்போது இந்தியத் தூதர் பி.என். ரெட்டி கலந்துகொள்ள இருக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

இந்துசமய
அந்திமக்கிரியைகள் சேவை



- தகனக் கிரியை
  பஞ்சமி தோஷ ஹோமம்
  சமய தீட்சை
  சூர்ணோத்சவம் (பொற்சுண்ணம் இடித்தல்)
- அந்தியேட்டிக்கிரியை
  பைரவ சாந்தி ஹோமம்

ஆகிய அனைத்து இறுதிக் கிரியைகளும் இந்துசமய முறைப்படி நடாத்தித் தரப்படும்.



"சைவபூஷணம்"
சிவஸ்ரீ.லெட்சுமண நடராஜக் குருக்கள்
(சைவக் குருக்கள்)
416.274.9974

பல அடியார்களின் வேண்டுதலிற்கேற்ப ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தினால் இவ் அந்திமக்கிரியைகள் சேவை வழங்கப்படுகின்றது.

Hindu Religious FUNERAL Services 416.274.9974
Sri Varasiththi Vinaayagar Hindu Temple Of Toronto
3025 Kennedy Rd. Unit-10, Scarborough, ON. M1V 1S3 Canada. 416.291.8500
மேன்மை கொள் சைவ நீதியும் தேமதுரத் தமிழும் உலகெலாம் விளங்கும் வகை செய்வோம்

கனடாவின் மதிப்பு மிக்க எழுத்தாளர்
"வீணைமைந்தன்" கே.ரி. சண்முகராஜா
அவர்கள் எழுதிய நான்கு புத்தகங்களின்
அறிமுக விழா



"தமிழ் சினிமாவும் நடிகர் திலகமும்"
நடிகர் திலகம் ஐயாவின் 95 வது பிறந்தநாள் வெளியீடு
யாழ்ப்பாணம் மொன்றியால் நகரங்களில் வெளியான வீணைமைத்தனின்
"மண்ணும் மனசும்"
"தமிழ சினிமாவில் மகாகவிபாரதி பாடல்கள்"
"மறக்கத்தெரியாத மனசு"

இடம் : தூயதாய் ஆரோக்கிய அன்னை ஆலய அரங்கு
காலம் : 23.09.2023 சனிக்கிழமை மாலை 6 மணி
அரங்கு முகவரி :131. BIRCHMOUNT ROAD, TORONTO (ONT) MIN3J7





தொலைபேசி
438 779 9697
416 732 1608

அனைவரும் வாருங்கள், நல்லாதரவு தாருங்கள்
வாசியுங்கள் ! நேசியுங்கள் !

# இவ்வார ராசிபலன்

**15-09-2023 வெள்ளி தொடக்கம் 21-09-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** மாற்றுச் சிந்தனைக் உதயமாகும் வாரம். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. ஆபரணச்சேர்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். வீண் வம்புகள் அகலும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். பணியாளர் ஒத்துமைப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. உதவிகள் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். புதிய முதலீடு உருவாகும். பகையாளிகளின் நிலை மாறும். முன்னேற்றம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கற்பனை வளம் அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். திருப்தி ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நட்சத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C





**ரிஷபம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். சேமிப்பு வளரும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். தொழில் லாபம் உண்டு. தொட்ட காரியம் ஜெயமாகும். சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். பேச்சில் நிதானம் தேவை. வீடு, மனை, யோகம் உண்டு. நினைத்த விஷயம் நிறைவேறும். ஆபத்துக்கள் விலகும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பங்குச்சந்தையில் பலன் கிடைக்கும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். புதிய முயற்சி பலிதமாகும். ஊதிய உயர்வு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். இடையூறு அகலும். வேதனைகள் சாதனைகள் ஆகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். கடன் விஷயத்தில் கவனம் தேவை. திருமண பேச்சு முடிவிற்கு வரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். கலகலப்புக்கூடும். ஆசைகள் நிறைவேறும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். இனியத் தகவல் வந்து சேரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். சந்தோஷம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வழக்கமான பணியில் மாற்றம் வரும். சுபச்செய்தி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். வசந்தம் தேடி வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். எதிரிகள் தொல்லைகள் ஒழியும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முன்னேற்றமான காலம். நட்பு வட்டம் விரிவடையும். சுபச்செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. உடல் சோர்வு நீங்கும். திருஷ்டிகள் விலகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். மனமகிழ்ச்சி கிட்டும். எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: இளம்ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,G




**கடகம்:** ஆளுமைத்திறன் அதிகரிக்கும் வாரம். திருப்தி தரும் காலம். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிநதனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களால் நன்மை உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். உதவும் குணம் அதிகரிக்கும். பிரச்சனைகள் விடுபடும். பதவி உயர்வு ஏற்படும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். இடையூறுகள் அகலும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத்தேவை அதிகரிக்கும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உள்ளம் மகிழும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். வாகன மாற்றம் நன்மை தரும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். ஆசைகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ராகு பகவான், அதிர்ஷ்ட எண்: 3,8,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,C



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். வியாபாரம் சிறக்கும். விரயம் குறையும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் கவனம் தேவை. களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். திடீர் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் வளர்ச்சி கூடும். முயற்சிகள் பலிதமாகும். பெற்றோர்களால் பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். சாதனையை சந்திப்பீர்கள். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். அரசியல் ஆர்வம் ஏற்படும். விரயங்கள் அதிகரிக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உற்சாகம் களை கட்டும். உயர் பதவி யோகமுண்டு. தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்ல செய்திகள் நாடி வரும். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆழமான மேன்மைகள் அமையும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். பாக்கிகள் வசூலாகும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். முயற்சிகள் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். இரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கலனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்லச் செய்தி நாடி வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,6,9,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**கன்னி:** மேன்மைகள் சந்திக்கும் வாரம். தடைகள் விலகும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் அதிகரிக்கும். மனநிம்மதி குறையும். தனசேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலை பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். தனலாபம் பெருகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். உடல்பொலிவு கூடும். முதலீடு தவிர்க்கவும். வரவு திருப்தி தரும். வழக்குகள் தாமதமாகும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் கிடைக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். மதிநுட்பம் தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. பிள்ளைகள் கல்வி மேம்படும். பதவி உயர்வு தாமதமாகும். செய்த்தொழிலில் கவனம் தேவை. மற்றவர்களால் தொல்லை உண்டு. மனைவியால் நன்மை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். காரியம் வெற்றி பெறும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**துலாம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். பொன்னான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். நினைத்த விஷயம் நிறைவேறும். பணமுயற்சி பலன் தரும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். ஊக்கம் அதிகரிக்கும். சிக்கனம் தேவை. கல்வியில் மேன்மை உண்டு. கடன் வசூலாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சீறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்ப ஒற்றுமை மேம்படும். பொருளாதாரம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. வியாபாரம் விருத்தியாகும். வெளியூர் பயணம் உண்டு. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உடல்நலம் சிறக்கும். தேகப்பலன் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. வாழ்த்துக்கள் வந்து சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிர்ஷ்ட எண்: 4,7,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q




**விருச்சிகம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்தி வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நாட்டம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பொறாமைகள் விலகும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். வீண்செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தான தர்மங்கள் பலன் தரும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குதூகலம் தாண்டவமாடும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,2,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X

(தொடர்ச்சி 25 பக்கம்)

# அன்பின் தொனி - 705

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

## கர்த்தர்மேல் நம்பிக்கை வைப்பவர்களை கைவிடமாட்டார்

கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனை துவக்கிபூமியின் மறுமுனைமட்டும் இருக்கிற எல்லா ஜனங்களுக்குள்ளும் சிதறஅடிப்பார், அங்கேநீயும் உன் பிதாக்களும் அறியாதமரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய். அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது, அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்து போகிறகண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார். உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும், உன் ஜீவனைப்பற்றி நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில் கொண்டிருப்பாய்.

**- உபாகமம் 28: 64-66**

கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து அவர்கள் பெலன் போயிற்றென்றும், அடைக்கப்பட்டவர்களாவது விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லையென்றும் காணும்போது, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப் படுவார். அப்பொழுது அவர்: அவர்கள் பலியிட்டபலிகளின் கொழுப்பைத்தின்று, பானபலிகளின் திராட்சரசத்தைக் குடித்த அவர் களுடைய தெய்வங்களும் அவர்கள் நம்பினகன்மலையும் எங்கே?

**- உபாகமம் 32: 36-37**

அதற்குநகோமி: என் மக்களே, நீங்கள் திரும்பிப்போங்கள், என்னோடே ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குப் புருஷராகும் படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலேஎனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ? என் மக்களே, திரும்பிப்போங்கள், நான் வயது சென்றவள், ஒரு புருஷனுடன் வாழத்தக்கவளல்ல. அப்படிப்பட்ட நம்பிக்கை எனக்கு உண்டாயி ருந்து, நான் இன்று இரவில் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு, பிள்ளைகளைப் பெற்றாலும், அவர்கள் பெரியவர் களாகுமட்டும், புருஷருக்கு வாழ்க்கைப்படாதபடிக்கு நீங்கள் பொறுத்திருப்பீர்களோ? அது கூடாது, என் மக்களே, கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால், உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது என்றாள்.

**- ருத் 1: 11-13**

பின்புதாவீது: நான் எந்தநாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்து போவேன், இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக கொள்வதைப் பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான்.

**- 1 சாமுவேல் 27: 1**

கர்த்தர் தாவீதை அவனுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்தபோது, அவன் கர்த்தருக்கு முன்பாகப் பாடின பாட்டு: கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் ரட்சகருமானவர். தேவன் நான் நம்பியிருக்கிற துருக்கமும், என் கேடகமும், என் ரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் ரட்சகருமானவர். என்னை வல்லடிக்கு நீங்கலாக்கி ரட்சிக்கிறவர் அவரே.

**- 2 சாமுவேல் 22: 1-3**

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலாவின் குமாரன் ஓசெயாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதாவுடைய ராஜா வின் குமாரனாகிய எசேக்கியா ராஜாவானான். அவன் ராஜாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருச லேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான், சகரியாவின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் ஆபி. அவன் தன் தகப்ப னாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதை செய்தான். அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப் போட்டான், அந்நாட்கள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள், அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின ˙மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களில் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை.

**- 2 இராஜாக்கள் 18: 1-5**

ரப்சாக்கே அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவாகிய மகா ராஜாவானவர் உரைக்கிறதும், நீங்கள் எசேக்கியாவுக்குச் சொல்ல வேண்டியதும் என்ன வென்றால்: நீநம்பியிருக்கிற இந்த நம்பிக்கைஎன்ன? யுத்தத்திற் மந்திராலோசனையும் வல்லமையும் உண்டென்று நீ சொல்லுகிறாயே, அது வாய்ப்பேச்சேயன்றி வேறல்ல, நீ என்னை விரோதிக்கும்படி யார் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறாய்? இதோ, நெரிந்தநாணல் கோலாகிய அந்த எகிப்தை நம்புகிறாய், அதின்மேல் ஒருவன் சாய்ந்தால், அது அவன் உள்ளங்கையில் பட்டு உருவிப்போம், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற வருக்கும் இப்படியே இருப்பான். நீங்கள் என்னிடத்தில்: எங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புகிறோம் என்று சொல்லுவீர்களாகில், அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் அல்லவோ எசேக்கியா அகற்றி, யூதாவையும் எருச லேமையும் நோக்கி: எருசலேமிலிருக்கிற இந்தப் பலிபீடத்தின் முன் பணியுங்கள் என்றானே.

**- 2 இராஜாக்கள் 18: 19-22**

***தொடரும்...***

# இவ்வார ராசிபலன்

*(24 பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். லாபமான காலம். தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புதுமுயற்சிகளை தள்ளிப்போடவும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. பங்குச்சந்தையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். எடுத்த முயற்சி வெற்றி பெறும்.பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல் நலம் சீராகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,3,1

அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G




**மகரம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். தேவைகள் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெரும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். விரோதங்கள் விலகும். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித்தரும். மருத்துவச் செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் செலவுகள் அதிகமாகும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். வாழ்வில் வசந்தம் கூடும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. பிள்ளைகளால் தனவரவு உண்டு. இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெருமைமிக்க காலம். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். பெண்களால் பெருமை சேரும். அவமானங்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பணப்பற்றாக்குறை நீங்கும். கொண்டாட்டங்கள் கூடும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியல் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9


அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,E




**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். சாதகமான வாய்ப்பு அமையும். ஆண்களின் அதிகாரம் உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வரன் வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**மீனம்:** சிறப்போடும், பொறுப்போடும் செயல்படும் வாரம். எண்ணங்கள் நிறைவேறும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புகள் அதிகமாகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாயம் பலன் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கிருபைகள் சேரும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோ வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. சுபிட்ஷம் பெருகும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நெருக்கடிகள் குறையும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J

# மகளிர் உரிமை தொகை | வங்கிக் கணக்கில் முன்கூட்டியே ரூ.1,000 செலுத்தப்பட்டதால் பெண்கள் மகிழ்ச்சி

இந்திய செய்திகள்

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார். திட்டத்தில் குழப்பம், குறைபாடு ஏற்படாமல் கண்காணிக்குமாறு முதல்வர் ஏற்கெனவே அறிவுறுத்தியதால், கடந்த சில நாட்களாக வங்கிக் கணக்கு சரிபார்ப்பு பணிகள் நடந்து வந்தன. 1.06 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்குகளை சரிபார்க்க ரூ.1 அனுப்பப்பட்டது.

இந்நிலையில், திட்டம் தொடங்கப்படும் நாளான இன்று அனைத்து வங்கிக் கணக்குக்கும் ஒரே நேரத்தில் தொகையை விடுவித்தால் தொழில்நுட்ப சிக்கல் ஏற்படக்கூடும் என்பதால், அதை தவிர்க்கும் விதமாக, சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களிலும் குறிப்பிட்ட அளவு பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேற்றே ரூ.1,000 உரிமை தொகை விடுவிக்கப்பட்டது.பயனாளிகளுக்கு இதுகுறித்த குறுஞ் செய்தியும் அனுப்பப்பட்டது. வங்கிகளும் அந்த தொகை வைப்பு செய்யப்பட்டதற்கான குறுஞ்செய்திகளை பயனாளிகளுக்கு அனுப்பின.

அறிவித்த நாளுக்கு முன்பாகவே ரூ.1,000 வந்து சேர்ந்ததால் பெண்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு கூட்டுறவு வங்கிகளில் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. அரசு முத்திரை, திட்டத்தின் பெயர், வங்கி பெயர், பயனாளி பெயர் உள்ளிட்ட விவரங்களுடன் பிரத்யேகமாக ஏடிஎம் அட்டையும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த



அட்டையையும் பயனாளிகளுக்கு முதல்வர் இன்று வழங்குகிறார். தொடர்ந்து, மற்ற மாவட்டங்களிலும் இதை பயனாளிகளுக்கு அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் வழங்குகின்றனர். 1.63 கோடி பேர் விண்ணப்பம்: சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் பெறுவோர், மாற்றுத் திறனாளி உதவித்தொகை பெறுவோரின் குடும்பத்தை சேர்ந்த பெண்களும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என்று முதல்வர் அறிவித்திருந்தார்.

இதையடுத்து, ஆக.18 முதல் 20ம் தேதி வரை தமிழகம் முழுவதும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டன. மொத்தம் 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டன.பிறகு, வருமான வரி, வாகனப் பதிவு, மின் இணைப்பு உட்பட அரசிடம் இருந்த தகவல் தரவுகளுடன், விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் ஒப்பிடப்பட்டன. போதிய விவரங்கள் கிடைக்காதது மற்றும் சந்தேகம் உள்ள விண்ணப்பங்கள் தொடர்பாக கள அலுவலர்கள் ஆய்வு நடத்தி, தகவல்களை சரிபார்த்தனர். இதையடுத்து, 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாதாமாதம் அவர்களது வங்கிக் கணக்கிலேயே இத்தொகை செலுத்தப்படும் என்பதால், பயனாளிகளின் வங்கிக் கணக்கை சரிபார்க்கும் பணி கடந்த செப்.12ம் தேதி முதல் நடந்தது. இதற்காக அவர்களது வங்கிக் கணக்குக்கு ரூ.1 அனுப்பப்பட்டது. அவர்களை அதிகாரிகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, வங்கிக் கணக்குக்கு பணம் வந்தடைந்த தகவலை உறுதி செய்தனர்.இந்நிலையில், ஏற்கெனவே அறிவித்தபடி, அண்ணா பிறந்தநாளான இன்று இத்திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும் விழாவில், 10 ஆயிரம் மகளிருக்கு உரிமைத் தொகையை வழங்கி, கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இந்த விழாவுக்காக கல்லூரி மைதானத்தில் பிரம்மாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

# அகதிகள் முகாமில் உள்ள முருகன் உள்ளிட்ட 4 பேரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை மத்திய அரசு தகவல்



திருச்சி அகதிகள் முகாமில் உள்ள முருகன் உள்ளிட்ட 4 பேரும் கள்ளத்தோணியில் இந்தியாவுக்குள் வந்ததால், அவர்களுக்கான பாஸ்போர்ட் உள்ளிட்ட ஆவணங்கள் இலங்கை அரசிடமிருந்து வந்தவுடன், அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த நளினி, முருகன் உள்ளிட்டோரை விடுதலை செய்து உச்சநீதிமன்றம் கடந்தாண்டு தீர்ப்பளித்தது.

இதில் இலங்கை நாட்டின் பிரஜைகளான முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் ஆகிய 4 பேரும் திருச்சியில் உள்ள அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.இந்நிலையில் லண்டனில் வசிக்கும் தங்களது மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால் தனது கணவர் முருகனை திருச்சி அகதிகள் முகாமில் இருந்து விடுவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் நளினி வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை கடந்த முறை விசாரித்த நீதிபதி என்.சேஷசாயி, இதுதொடர்பாக மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தார்.

கள்ளத்தோணியில் வந்தனர்: இந்நிலையில், இந்த வழக்கில் மத்திய அரசின் வெளிநாட்டினருக்கான பதிவு அலுவலக மண்டல அதிகாரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில், ''முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலையாகியுள்ள இலங்கையைச் சேர்ந்த முருகன் உள்ளிட்ட 4 பேரும் உரிய ஆவணங்கள் எதுவும் இல்லாமல் கள்ளத்தோணி மூலமாகவே இந்தியாவுக்குள் வந்துள்ளனர்.இதன் காரணமாகவே அவர்கள் திருச்சி அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பாஸ்போர்ட் மற்றும் பயண ஆவணங்களை வழங்கக் கோரி இந்தியாவில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு கடந்த டிசம்பர் மாதம் கடிதம் அனுப்பப்பட்டுள் ளது. உரிய ஆவணங்கள் கிடைத்ததும் இவர்கள் 4 பேரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொது இடங்களில் விநாயகர் சிலை வைத்து பிரச்சினை செய்யக் கூடாது: உயர் நீதிமன்றம்

பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுத்தக் கூடாது என உயர் நீதிமன்ற நீதிபதிகள் கூறினர். திருச்செந்தூர் காயமொழியைச் சேர்ந்த பாரதிய வியாபாரிகள் சங்க கூட்டமைப்பின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் வி.பி. சக்திவேல், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: ‘விநாயகர் சதுர்த்தியை ஒட்டி திருச்செந்தூர் மற்றும் மெய்ஞானபுரம் காவல் சரகப்பகுதியில் செப். 18ல் 7 இடங்களில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யவும், அந்த சிலைகளை செப். 21ல் ஊர்வலமாக எடுத்துச் சென்று கடலில் கரைக்கவும் அனுமதி வழங்க போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும்‘ என்று



மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், டி.பரத சக்கரவர்த்தி முன் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ''பொது இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து தேவையில்லாமல் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடாது. சிலையைப் பாதுகாக்கும் பணியில் போலீஸார் இரவு பகலாக பணிபுரிய வேண்டியதுள்ளது. இதெல்லாம் தேவையா?ஒரு சாதாரண விஷயத்தை ஏன் இப்படி பெரிதாக்க வேண்டும்.

மனுதாரர் விநாயகர் சிலை வைக்க முடிவு செய்து இடங்களுக்கு அனுமதி கோரி போலீஸாரிடம் தனித்தனியாக மனு அளிக்க வேண்டும். அந்த மனுவை பரிசீலித்து போலீஸார் அனுமதி வழங்க வேண்டும். போலீஸார் விதிக்கும் நிபந்தனைகளை முறையாக பின்பற்ற வேண்டும்'' என உத்தரவிட்டனர்.

# “சனாதன தர்மத்தை அழிக்க நினைக்கிறது இண்டியா கூட்டணி” பிரதமர் மோடி ஆவேசம்

“சுவாமி விவேகானந்தர், லோக்மான்ய திலகருக்கு உத்வேகம் அளித்த சனாதன தர்மத்தை ‘இண்டியா’ கூட்டணி கட்சியினர் அழிக்க நினைக்கிறார்கள்'' என்று பிரதமர் மோடி ஆவேசமாக குற்றம்சாட்டியுள்ளார்.

விரைவில் சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்க உள்ள மத்தியப் பிரதேச மாநிலத்துக்கு சென்றுள்ள பிரதமர் மோடி வியாழக்கிழமை அங்கு பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அம்மாநிலத்தின் சாகர் மாவட்டத்தில் நடந்த பேரணிக் கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் மோடி, ''சமீபத்தில் அவர்கள் (எதிர்க்கட்சி கூட்டணி) மும்பையில் கூட்டம் நடத்தினர். அங்கு அவர்கள் காமாண்டியா கூட்டணியை எவ்வாறு வழிநடத்துவது மற்றும் அரசியல் வியூகம் குறித்து முடிவெடுத்திருப்பார்கள் என்று நான் நினைத்தேன். அவர்கள் மறைமுக கொள்கை ஒன்றினையும் எடுத்துள்ளனர்.

இந்தியாவின் கலாசாரத்தின் மீது தாக்குதல் நடத்துவது என்பதே அது. இந்தியர்களின் நம்பிக்கை மீது தாக்குதல் நடத்தி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நாட்டை ஒருங்கிணைத்து வந்த எண்ணங்கள், மதிப்புகள் மற்றும் மரபுகளை அழிக்க நினைக்கிறார்கள். ‘காமாண்டியா’ கூட்டணியினர் சனாதன தர்மத்தை அழிக்க நினைக்கிறார்கள். இன்று அவர்கள் வெளிப்படையாக சனாதன தர்மத்தின் மீது குறிவைத்துள்ளார்கள். நாளை நம் மீதும் தாக்குதலைத் தொடங்குவார்கள்.

நாடு முழுவதும் உள்ள சனாதானிகள் மற்றும் நாட்டை மிகவும் நேசிக்கும் அனைவரும் அவர்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதுபோன்றவர்களை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும்‘‘ என்று பிரதமர் மோடி பேசினார்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL VACANT LAND CONSTRUCTION




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank TD Canada Trust RFA FIRST NATIONAL FINANCIAL LP

MCAP HOME TRUST EQUITABLE BANK radius financial RMG mortgages

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa
லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
905-808-9930
5 MCMURCHY AVE N, UNIT 12
BRAMPTON, ON L6X 2R6
905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35
MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1432 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 15, 2023

# பெருந்தோட்ட தாக்குதல் சம்பவங்களை முடிவுக்கு கொண்டுவர சகல தரப்பினையும் அழைத்து அவசர மாநாடு கூட்டுக!

## பாராளுமன்ற உறுப்பினர் மனோ, ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்



இலங்கையில் அண்மைக்காலமாக இந்திய வம்சாவளி மலையக தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தினரால் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
ஐ நா அறிக்கையின்படி தோட்ட தொழிலாளர்களே இலங்கையில் மிகவும் வறுமை மற்றும் பின் தங்கிய நிலையில் உள்ளனர். நாட்டின் சமூக-பொருளாதர குறியீடுகளின் அடிப்படையில் அந்த மக்கள் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.
இந்நிலையில் மலையக மக்கள் மீது தோட்ட நிர்வாகத்தினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவ்வகையில் இரத்தினபுரி மாவட்டத்திலும் சமீபத்தில் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு தோட்ட தொழிலாளி ஒருவரின் வீடு நிர்வாகத்தினரால் உடைத்தெறியப்பட்ட கானொளி ஒன்று வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இப்படியான சம்பவங்களை கண்டித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். இது தொடர்பில் அவர் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.
(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# 'இசைக் கவி' ரமணன் அவர்களை கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்திற்கு அழைத்து வரவேற்பளித்த பிரதம குரு விஜயகுமாரக் குருக்கள் அவர்கள்



கடந்த 9ம் திகதி சனிக்கிழமை மாலை கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் மாலை தமிழ்நாடு " இசைக் கவி ரமணன் அவர்கள் . "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றினார். கனடா ஆரபி படைப்பகம் ஆதரவில் இந்த அற்புதமான நிகழ்வு மேடையேற்றப்பட்டது.
இதேவேளை தமிழ்நாடு " இசைக் கவி ரமணன் அவர்களை கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் தனது துணைவியார் மற்றும் சக சிவாச்சாரியார்கள் சகிதம் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் ஆலயத்திற்கு அழைத்து வரவேற்று ஆசி வழங்கினார். அங்கு தமிழ்நாடு " இசைக் கவி ரமணன் அவர்கள் . அவர்கள் நல்லூர்க் கந்தனுக்காக ஒரு பாடலை உருகிப் பாடினார். இங்கே காணப்படும் படம் அங்கு எடுக்கப்பட்டதாகும்.

# ராஜதந்திர வாய்ப்புகளைப் பயன்படுத்துவது

## – யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



சனல் நாலு வெளியிட்ட வீடியோவை முதலில் அதிகமாக பரவலாக்கியதும் பரப்பியதும் சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைத்தளக் கணக்குகள் தான். அந்த ஆவணப் படத்தில் பிள்ளையானுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருப்பதனால், சாணக்கியனுக்கு ஆதரவான தரப்புகள் அதை வேகமாகவும் அதிகரித்த அளவிலும் பரப்பினார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சாணக்கியன் ஆகிய இரண்டு தரப்புகளிடமும் பலமான சமூக வலைத்தள பிரச்சாரகக் கட்டமைப்பு ஒன்று உண்டு. சாணக்கியனுக்கு ஆதரவான கட்டமைப்புக்கூடாகத்தான் இப்பொழுது பிள்ளையானுக்கு எதிரான அசாத் மௌலானாவின் சாட்சியம் பரவலாக பகிரப்பட்டு வருகின்றது.
(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

# ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவில் கோவிட் – 19 தொடர்பான குறும்படத்திற்கு இரண்டு விருதுகள்



கடந்த 9ம் 10ம் திகதிகளில் கனடாவின் மார்க்கம் நகரில் இடம்பெற்ற 2023 ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவிற்கான திரைப்படங்கள் திரையிடப்பட்ட முறையில் விழாவில் வெற்றிபெற்ற திரைப்படங்களும் தனி ஆளுமைகளும் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டு முடிவுகள் எமது உட்பக்கம் ஒன்றில் காணப்படுகின்றன. ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவில் கனடாவில் தயாரிக்கப்பெற்ற கோவிட்-19 தொடர்பான 'அபூர்வா' என்னும் குறும்படத்திற்கு இரண்டு விருதுகள் கிடைத்துள்ளன.
கோவிட்-19 தொடர்பான குறும்படத்திற்கு இரண்டு விருதுகளை 'அபூர்வா' திரைப்படம் தட்டிக் கொண்டது. மேற்படி படத்தின் தயாரிப்பாளரும் வர்த்தகப் பிரமுகருமான திரு ஸ்ரீ நடராஜசுந்தரம். இயக்குனர் செல்வன். பிரவின்த் ரவி அச்சுதன் மற்றும் சிறந்த இளம் நடிகைக்கான விருதினைப் பெற்ற செல்வி ஹம்சா குமார் ஆகியோர் மற்றும் ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் நிறுவனர் செந்தூரன் நடராஜா ஆகியோர் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

# தமிழ்நாடு " இசைக் கவி ரமணன்" "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றிய அற்புதமான நிகழ்வு





கடந்த 9ம் திகதி சனிக்கிழமை மாலை கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் மாலை 6.00 மணிக்கு தமிழ்நாடு " இசைக் கவி ரமணன் அவர்கள் . "பராசக்தியின் செல்லப்பிள்ளை பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றிய அற்புதமான நிகழ்வு இடம்பெற்றது
கனடா ஆரபி படைப்பகம் ஆதரவில் இந்த அற்புதமான நிகழ்வு மேடையேற்றப்பட்ட வேளையில் கனடா பைரவி நுண்கலைக் கூடத்தின் பாடக பாடகிகள் பாரதியார் பாடல்களை இசைக்கருவிகளின் பின்னணியில் பாடி சபையோரையும் "இசைக் கவி ரமணன் அவர்களையும் மகிழ்வித்தனர்..
(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)